# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. VI** **Issue 7** **October 2016**

இம்மாத மலரில். . .

### பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . . | 4 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 10 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 13 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 19 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 21 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 24 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . | 27 |
| **The Life Divine – Outline** . . . . . . | 30 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 35 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 43 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 48 |
| **அன்னை இலக்கியம்** மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . | 52 |


(முன், பின் அட்டைகளைச் சேர்த்து மொத்தம் 68 பக்கங்கள்)

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

*ஜீவியத்தின் ஓசை*

**பெரியதாகக் கருதும் மனநிலை அகங்காரம்.**

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்

# II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 304
Para 9

Suppose this hypothesis proved to be tenable.

All the unexplained processes of Nature would find their meaning and their place.

Energy seems to create substance.

But, in reality, substance would be inherent in Energy.

In the same way as existence is inherent in Consciousness-Force.

The Energy is a manifestation of the Force.

Substance is a manifestation of the secret Existence.

But it is a spiritual substance, and would not be apprehended by material sense.

It would be seizable by that sense when given the forms of Matter by Energy.



# II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

நாம் தாற்காலிகமாக ஏற்றுக் கொண்ட இக்கருத்து நிலையாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக நிரூபணம் ஆகலாம்.

அப்படியானால் விளக்காமல் விட்ட இயற்கையின் செயல்முறைகள் அனைத்தும் தங்கள் விளக்கத்தைக் கண்டடையும்.

சக்தி பொருளை உற்பத்தி செய்வதாகத் தெரிகிறது.

ஆனால், உண்மையில், பொருள் என்பது சக்தியில் ஏற்கனவே புதைந்துள்ளது.

அதேபோன்று ஜீவியத்தில் வாழ்வு உள்ளார்ந்து அமைந்துள்ளது.

இயக்காற்றலிலிருந்து சக்தி வெளிப்படுகிறது.

ரகசியமான பெரு வாழ்வு பொருளை வெளிப்படுத்துகிறது.

ஆனால் அது ஆன்மிகப் பொருளாதலால் ஜட உணர்வால் அதைக் கைப்பற்ற முடியாது.

ஜடம் சக்தியால் ரூபம் பெறுவதானால் ஜட உணர்வால் அதை உணர முடியும்.

One begins to understand that design, quantity and number can be a base.

They can be a base for the manifestation of quality and property.

For design, quantity and number are powers of existence-substance.

Quality and property are powers of the consciousness.

They are powers of its force that reside in the existence.

They can then be made manifest and operative.

They are made operative by a rhythm and process of substance.

The growth of the tree out of the seed would be accounted for.

It is by the indwelling presence of what we have called the Real-Idea.

The Infinite contains a self-perception of the significant form.

It contains the living body of its power of existence.

That has to emerge from its own self-compression in energy-substance.

This would be carried internally in the form of the seed.

It would be carried in the occult consciousness involved in that form.



வடிவமைப்பு, அளவு மற்றும் எண்ணிக்கை இவை அடிப்படையானவை என்று ஏற்றுக் கொள்ள முடியும்.

இவை தரம் மற்றும் குணத்தை வெளிப்படுத்த அடிப்படையாக இருக்க முடியும்.

வடிவமைப்பு, அளவு மற்றும் எண்ணிக்கை இவை சத்தின் திறன்.

தரம் மற்றும் குணம் ஜீவியத்தின் திறன்.

இவை சத்தில் வதியும் இயக்காற்றலின் திறன் ஆகும்.

அவற்றை வெளிப்படுத்தி இயங்கச் செய்ய முடியும்.

பொருளின் லயம் மற்றும் செய்முறையால் அவை இயக்கப்படுகின்றன.

விதையிலிருந்து மரம் வெளிப்பட்டு வளர்வதை விளக்க முடியும்.

அது அதனுள் உறையும் முழு எண்ணத்தால் நடைபெறுகிறது.

அனந்தம் தன் ஒரு குறிப்பிட்ட ரூபத்தைச் சுயமாக உணர்கிறது.

அது ஜீவனுள்ள உடலின் சக்தியைத் தன்னுள்ளடக்கியுள்ளது.

அது சக்தியின் பொருளில் தன் சொந்த சுய அழுத்தத்தால் வெளிப்பட வேண்டும்.

இதைச் சக்தி தன்னுள் விதை எனும் ரூபமாகத் தாங்கி நிற்கும்.

அந்த ரூபத்தினுள் நுண்ணியமாகப் புதைந்துள்ள ஜீவியம் அதைத் தாங்கியிருக்கும்.

It would naturally evolve out of it.

We can understand also the material infinitesimals like gene and chromosome.

They carry in themselves psychological elements.

These are to be transmitted to the physical form.

That form has to emerge from the human seed.

It is the same principle in the objectivity of Matter as in our subjective experience.

The subconscient physical carries in it a mental psychological content.

It carries impressions of past events, habits.

It carries fixed mental and vital formations, fixed forms of character.

It sends them up by an occult process to the waking consciousness.

It thus originates or influences many activities of our nature.

Contd...

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உலகம் முக்கியமானால் சிந்தனை நிற்காது.



அது இயல்பாகப் பரிணாமம் பெற்று வெளிவரும்.

நாம் மிகச்சிறிய ஜடப் பொருளான மரபணுவையும் பண்பணுவையும் கூட புரிந்து கொள்ள முடியும்.

அவை தம்முள் மனோதத்துவக் கூறுகளைத் தாங்கியுள்ளன.

இவை உடலின் ரூபத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அந்த ரூபம் மனிதனின் வித்திலிருந்து எழும்ப வேண்டும்.

அகத்தின் அனுபவம் புறத்தில் ஜடப் பொருளாக வெளிப்படும் தத்துவத்தை ஒத்தது இது.

ஆழ்மன உடல் தன்னுள் மனத்தின் உளவியலை உட்பொருளாகத் தாங்கியுள்ளது.

அது பழைய நிகழ்வுகள், பழக்கங்கள் இவற்றின் பதிவுகளைத் தன்னுள் தக்கவைத்துள்ளது.

நிலையான மனம் மற்றும் உணர்வின் உருவாக்கங்கள், நிலையான பண்பின் ரூபங்கள் இவற்றை அது தாங்கியுள்ளது.

இவற்றை அது நுண்ணியமான செய்முறைகளின் வாயிலாக நம்மில் விழிப்பாக உள்ள ஜீவியத்திற்கு அனுப்புகிறது.

அது இவ்வாறாக நம் குணத்தின் பல செயல்பாடுகளை ஆரம்பித்து வைக்கிறது அல்லது அவற்றில் தாக்கம் ஏற்படுத்துகிறது.

தொடரும்...

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மோட்சம் முக்கியமானால் சமர்ப்பணம் பூர்த்தியாகாது.

## இம்மாதச் செய்தி

# மௌனம் செயலின் மூலமான ஊற்று என்பது போல் அசத் சத்தின் ஆதிமூலம்.



## சாவித்ரி

**Page 189: Read the No – gestures of her silhouettes**

*அவள் நிழற்படங்கள் நினைவு கூராத சிறு குறிப்புகள்*

- ✡ சுமைதாங்கி அலையும் நேரம் அவற்றைப் பெற முயன்றாள்
- ✡ அவள் தொடர்கள் நடன கற்பனைகள்
- ✡ ஸ்வர புதிரின் சொர்க்கத்திற்குள் தப்பிச்சென்று உறைவது
- ✡ மறையும் மண்ணில் ஒளியும் பாதங்களின் மின்னற்பொறிகள்
- ✡ சிறந்த சிக்கலின் எண்ணக் கோவைகளும், நம்பிக்கையும்
- ✡ ஆழ்ந்த ஆசைகளின் கிளைப் பாதைகள்
- ✡ செறிந்த மூலைகளில் குவிந்த அவள் கனவுகள்
- ✡ சுழலும் சுழற்சிகளைக் கடக்கும் அர்த்தமற்ற சுழல்களின் தில்லுமுல்லு
- ✡ அலைபவன் வழிதவறி மறையும் காட்சிகளுள் கலந்து
- ✡ அதன் விளங்காத பொருள், தவறும் யூகங்களைத் தவறாமல் தொடர்ந்து
- ✡ கிடைத்தவை அனைத்தும் முக்கியச் சொற்கள், முக்கியத்தை அறியவில்லை
- ✡ தன் பார்வையில் கண்கூசும் ஜோதிமயமான சூரியன்
- ✡ பிரகாசமான புதிர், ஒளிமயமான விரிந்த படம்
- ✡ ஊதா நிற எண்ணவானை ஒளிவிடச் செய்யும்
- ✡ மங்கிய பெரிய சமாதி அவள் விண்மீன்களை இரவுக்களித்தது
- ✡ திறந்த ஜன்னலிடை அமர்ந்த காட்சி
- ✡ தெறிக்கும் மின்னற்பொறியால் குவியும் செய்திகளைப் படித்து

✡ தத்துவக் காதலின் அத்தியாயங்களைப் பயின்றான்

✡ இழந்த சத்தியத்தைத் தேடும் ஆத்ம முயற்சி

✡ ஆத்மாவின் அனுபவபூர்வமான உண்மைகள் அவள் கற்பனைக் கதைகள்

✡ அவள் அர்த்தமும், கர்வமும், அர்த்தமற்ற எழுச்சியும் பூட்டி வைக்கப்பட்டு

✡ பிடிபடாத கோபமான தன்னிச்சைப் போக்கு, புதிரான திருப்பங்கள்

✡ அவள் இரகஸ்யத்தின் அற்புதமான மடிப்புகள்

✡ அவளுடலை பார்வையினின்று மறைக்கும் மடிப்புகள்

✡ வினோதமான முக்கிய ரூபங்கள் அவள் ஆடையில் நெய்யப்பட்டு

✡ ஆத்மாவின் அர்த்தம் அவள் அர்த்த புஷ்டியுள்ள எல்லை

✡ அவள் எண்ணத்தின் வண்ணம் பொய்யான பொலிவு பெறுவதைக் கண்டாள்

✡ அவள் உயர்ந்த ஆடைகள் கற்பனை ரூபங்களைக் கொண்டது

✡ மாறும் முகமூடிகள் மறைவதற்குரிய அழகிய சாதனைகள்

✡ திணறடிக்கும் ஆயிரம் முகங்களைக் கொண்ட சத்தியம்

✡ தெரியாத கண்கள் அவள் ரூப வண்ணங்கள் அவனைக் கண்டன

✡ பேசமுடியாத புரிய முடியாத வாய்கள்

✡ அவள் முகமூடியுள்ளிருந்து உருவமாக எழுந்து பேசுகின்றன

✡ மறைந்த மகத்துவம் எட்டிப் பார்க்கும் எழில்

✡ அவளாடையின் சூட்சும பிரதாபம்



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/34. சமர்ப்பணமான எண்ணம் பிரபஞ்ச எண்ணமாகும்.

- சமர்ப்பணம் என்பது ஆயிரம் நிலைகளில் உள்ளது.
- வீடு, டிரஸ், புத்தகம், ஊர், படிப்பு, மனிதனுக்கு எத்தனை நிலைகள் உண்டோ அத்தனை நிலையும் சமர்ப்பணத்திலுண்டு.
- அன்னை கூறும் சமர்ப்பணம் நான்கு. தூங்கும்முன், சாப்பிடும்முன், பேசும்முன், செயல்படும்முன் சமர்ப்பணம்.
- *ஒரே காரியத்தைப் பல நிலைகளில் சமர்ப்பணம் செய்யலாம்.*
- தூங்குவதைச் சமர்ப்பணம் செய்தால் நிம்மதியாகத் தூங்கலாம், கெட்ட சொப்பனம் வராது, எழும்பொழுது ஏராளமான சக்தியிருக்கும், மனம் சமர்ப்பணத்தால் குதூகலமாக இருக்கும். தூக்கம் தியானமாகும்.
- சாப்பிடும்முன் சமர்ப்பணம் செய்தால், தடையின்றி சாப்பிடலாம், சாப்பாடு ருசிக்கும்.
- சமர்ப்பணம் ஆழ்ந்தால் ஒரு நாள் சமர்ப்பணத்தால் இனி சாப்பாட்டு நேரம் தொந்தரவு தடை வராது.
- சாப்பாட்டுக்குப் பஞ்சமானவன் ஒரு வேளை சாப்பாட்டைச் சமர்ப்பணம் செய்தால் பஞ்சம் போகும்.
- ஒவ்வொரு கவளமும் சமர்ப்பணம் செய்வது சாப்பாட்டை யோகமாக்குவது.
- சமர்ப்பணம் செய்தால் சிடுமூஞ்சி சிரித்த முகத்துடன் பரிமாறுவாள்.
- *சமர்ப்பணம் சர்வ அர்ப்பணம். சமர்ப்பணத்தால் திருடு தெய்வ கைங்கரியமாகும்.*
- சமர்ப்பணத்தையே சமர்ப்பணம் செய்யும் நேரம் உண்டு.

- ஊரெல்லாம் சொர்க்கம், காண்பவரெல்லாம் தெய்வமாக்கக் கூடியது சமர்ப்பணம்.
- ஒரு வியாதி வந்தால் குணமாகாது என்று டாக்டர் கூறுகிறார்.
- இன்னொரு வியாதியை எட்டு மாதத்தில் குணப்படுத்தலாம் என்கிறார்.
- இன்னொரு வியாதியை ஆப்பரேஷன் செய்து குணப்படுத்தலாம் என்கிறார்.
- வேறொரு வியாதியைக் குணப்படுத்த **treatment** வியாதியை விடக் கடுமையானது என்கிறார்.
- இது போல் எந்த வியாதியும் சமர்ப்பணத்தால் ஒரு படி கடுமை குறையும்.
- முடியாது என்பது முடியும்.
- ஆப்பரேஷன் என்பது இல்லாமல் முடியும்.
- கடுமையான வைத்தியம் கடுமையின்றி முடியும்.
- ஆபத்தான வியாதி குணமாகியது. அது ஆப்பரேஷனால். 15 நாள் படுக்கையில் தலையை தலையணையில் முகத்தை வைத்துக் கொண்டு படுக்கச் சொன்னார்.
- *சமர்ப்பணத்தால் அதை ஆப்பரேஷனில்லாமல் குணம் செய்தார் ஒருவர்.*
- மேற்சொன்ன எல்லா வியாதிகளையும் மூன்று நாள் பிரார்த்தனையால் குணப்படுத்தியவர் பலர்.
- வியாதி என்று வந்து விட்டால் பயம் வரும். சமர்ப்பணம் தோன்றாது, அன்னை மறந்து போகும் டாக்டர் மலை போலிருப்பார். குணமானால் போதும் என்றிருக்கும்.
- யானை வாயில் போன கரும்பு, எதிரியை நம்பி, நண்பனாக நம்பி எல்லாப் பிடியையும் கொடுத்தபின் அவன்



எக்காளமிடுகிறான். "உன்னை நடுத்தெருவில் நிற்க வைத்து வேடிக்கை பார்ப்பேன்" என்கிறான்.

*அன்பர்க்குச் சமர்ப்பணத்தில் நம்பிக்கையுண்டு.*
*எதிரி கூறியது அத்தனையும் நடந்தது, அவனுக்கே நடந்தது, அபரிமிதமாகவும் நடந்தது, ஆயுள் முழுவதும் நடந்தது.*

- சமர்ப்பணமான எண்ணம் பிரபஞ்சமான எண்ணமாகும் எனில் அன்பருக்குக் கிடைத்தது அவர் மூலம் அனைவருக்கும் கிடைக்கும் என்று பொருள்.
- தமிழ் நாட்டில் ஒரு இன்ஜீனியரிங் காலேஜ் 500 ஆகியது.
- ஆறு பைசா கூலி வாங்கியவர் 600 ரூபாய் கூலி வாங்குகிறார்.
- கிழிந்த புடவை கிடைக்காதவருக்குப் புதுப்புடவை ஏராளமாக வருகிறது.
- ஒரு வேளை சாப்பாடில்லாதவர்க்குச் சொந்தமாக ஆறு வேளை சாப்பாடு வருகிறது.
- ஒரு மகாநாடும் நடத்தாத **academy** இருபது மகாநாடு நடத்துகிறது.

*சமர்ப்பணம் பெரியது. அளவில் பெரியது.*
*தரத்தில் பெரியது. பிரபஞ்சம் முழுவதும் பரவுவது, ஒரு கட்டுரை எழுத ஆசைப்பட்டால் சமர்ப்பணம் 800 கட்டுரைகளை வெளியிடுகிறது.*

- இது எண்ணம் சமர்ப்பணமாகும் பொழுது. அடுத்த கட்டத்தில் உணர்ச்சி சமர்ப்பணமாகும். அதற்கடுத்த கட்டத்தில் செயல் சமர்ப்பணமாகும்.

*முடிவான கட்டத்தில் ஜீவன் சமர்ப்பணமாகும்.*
*ஒரு அன்பரின் ஜீவன் சமர்ப்பணமானால் உலகில் அனைத்து மக்கள் ஜீவனும் சமர்ப்பணமாகும்.*

- ஒருவர் சிறப்பு உலகைக் காக்கும் என்று சாவித்திரியில் பகவான் கூறுகிறார்.

- கடந்த கால கர்மம் உண்டு என நம்புபவர்கட்கு அத்தனை கர்மங்களும் சமர்ப்பணத்தால் புண்ணியமாகும்.
- சமர்ப்பணம், பிரபஞ்சத்தைத் தழுவும், அதைக் கடந்த பிரம்மத்தைத் **(Transcendent)** தழுவும்.
- சமர்ப்பணம் என்பது யோகப் பரிபாஷை.
- பரிபாஷை எல்லாத் துறைகட்கும் உண்டு.
- டாக்டர், வக்கீல், இன்ஸுரன்ஸ், வைஷ்ணவர், சைவர், ஆசிரியர், படிக்காத பெண்கள் எனப் பல வகையானவரிடம் அவரவர்க்குரிய பரிபாஷை உண்டு.
- அப்படி மாறியவை நாம் அறிவோம். நமஸ்காரம் போய் வணக்கமும், அது போவதற்கு முன் நமஸ்தேயும், அதன் பின் ஹல்லோவும், தற்பொழுது ஹாய் வந்ததும் பரிபாஷை காலத்தால் மாறுவதாகும்.
- *சமர்ப்பணம் என்ற சொல் ஆரம்பத்தில் எதைக் குறிக்கிறது?*
- எவரும் ஒரு விஷயத்திற்குக் கட்டுப்பட்டவர். இளைஞன் குடும்பத்திற்குக் கட்டுப்பட்டவன். மனிதர்கள் ஊருக்குக் கட்டுப்பட்டவர். எவரும், எந்த நல்லவரும் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவர், அரசியல்வாதி கட்சிக்குக் கட்டுப்பட்டவன். *சுயநலம் எதற்குக் கட்டுப்பட்டாலும், அதையும் கடந்து சுயநலத்திற்குக் கட்டுப்பட்டவன்.*
- திறமைசாலி, சுயநலமானால், அவன் பரோபகாரம், பெருந்தன்மை, ராஜதர்மம் எதுவும் அத்துறையில் செயல்பட்டாலும் அங்கும் இலட்சியத்தைக் கடந்து, திறமை, திறமையாகச் செயல்படும் பொழுது தன் செயலால் பிறர் எவர்க்கும் ஒரு துளி வசதியும் வராமல் கண்காணிப்பவன் சுயநலத்திலும் சிகரமான சுயபல லட்சியமுள்ளவன்.
- பூனை எலியைக் கொல்வது ஒரு செயல். அது பசிக்காகக் கொல்கிறது. அதுவே அதன் தர்மம். யோக பாஷையில் - பரிபாஷையில் - பூனை எலியைக் கொல்வதைத் தன் பசிக்குச் சமர்ப்பணம் செய்கிறது எனலாம்.



- போர் வீரன் மனம் மலர்ந்து மகிழ்ந்து போரில் உயிர் விடும் பொழுது அவன் தன் உயிரை நாட்டிற்குச் சமர்ப்பணம் செய்கிறான்.
- தம்பி மீது பொறாமையால் தகப்பனாரிடம் கோள் சொல்லும் அண்ணன் தன் செயலை பொறாமைக்குச் சமர்ப்பணம் செய்கிறான்.
- *உலகில் வாழ்வு ஓராயிரம் நிலைகளில் உள்ளது.* ஒவ்வொரு நிலைக்கும் சமர்ப்பணமுண்டு. சமர்ப்பணம் அந்த நிலைக்குரியது.
- தலைப்பு பிரபஞ்ச எண்ணத்தைக் கூறுகிறது.
- வேலை செய்பவன் முதலாளிக்குப் பணிகிறான். அவன் வேலை முதலாளிக்குச் சமர்ப்பணமாகிறது.
- முதலாளிக்குச் சமர்ப்பணமாகும் வேலை, ஊருக்குச் சமர்ப்பணமாகலாம், உலகுக்குச் சமர்ப்பணமாகலாம், சட்டத்திற்குச் சமர்ப்பணமாகலாம், தர்மத்திறகும் சமர்ப்பண-மாகலாம்.
- பிரபஞ்சம் தர்ம நியாயத்தைக் கடந்தது.
- சமர்ப்பணம் தர்ம நியாயத்தைக் கடந்த நேரம் *பிரபஞ்ச எண்ணமாகும்.*
- பிரபஞ்சத்தைக் கடந்தால், பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்ம எண்ணமாகும் **(transcendent thought).**
- *இந்த எண்ணத்துள்* **(all is all, all in each, each in all)** *அனைத்தும் உண்டு.*
- இதைக் கடந்தது பிரம்மம், சுத்த பிரம்மம், தூய பிரம்மம், மூலம், அங்கு எண்ணமில்லை. எண்ணம் மௌனமாகும்.

*அது நாமறிந்த மௌனமாகாது. அது பிரம்ம மௌனம்.* அங்குச் சமர்ப்பணம் பிரம்ம மௌனத்திற்குரியது.

- எண்ணம் என்பது மனம் தன் உணர்ச்சிக்கு (**mental sensation**) உருவம் தருவது.
- இதயம் என்ற நெஞ்சு, மனஸ் என நாம் கூறுவது தன் எண்ணத்திற்குத் தரும் உருவம் உணர்ச்சி (**feeling, Joy**). அதுவே அங்கு ஆத்மாவுடன் தொடர்பு கொண்டால் (**love**) அன்பாகும், பிராணனுடன் தொடர்பு கொண்டால் (**sensation**) உடலுணர்வாகும்.
- *ஒவ்வொரு நிலைக்கும் சமர்ப்பணம் உண்டு.* சமர்ப்பணம் சர்வ அர்ப்பணமாகும்.
- மனிதன் தானே செயல்பட முடியாது.
- அடுத்தவருடன் தொடர்பு கொள்வதே செயல்.
- அடுத்ததுடன் தொடர்பு கொள்வதே செயல்.
- செயலில்லாமல் நிகழ்ச்சியில்லை.
- நிகழ்ச்சியின்றிச் சமர்ப்பணமில்லை.
- நாம் உள்ள நிலையிலேயே சமர்ப்பணம் செய்ய முடியும்.
- மனத்திலிருந்து மேலேயோ, கீழேயோ சமர்ப்பணம் செய்ய முடியாது.
- ஒருவர் ஒரு மொழியில் பேசுவதை அதே மொழியில் எழுதலாம்.
- அடுத்த மொழியில் எழுத இரு மொழியிலும் பாண்டித்தியம் தேவை.
- எழுதுவது எழுத்திற்குச் சமர்ப்பணம் செய்வதாகும்.
- அடுத்த மொழியில் எழுதுவது மொழி பெயர்ப்புக்கு - தமிழாக்கத்திற்குச் - சமர்ப்பணம் செய்வதாகும்.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 129. பொங்கி வரும் சந்தோஷம் - Conscious Joy

- கல்லடியில் தப்பலாம் கண்ணடியில் தப்ப முடியாது.
- *உள்ளத்து சந்தோஷம் உலகமறிந்தால் போய்விடும்.*
- உள்ளம் பெறும் உவகை உலகத்தையடைவதே பூரண யோகம்.
- ஜீவன், ஜீவியம், சக்தி, ஆனந்தம் என்பவை சச்சிதானந்தம்.
- ஆனந்தம் தானே எழுவது மனம் ஆத்மாவை வெளிப்-படுத்துவது.
- அது பொங்கிவரும் சந்தோஷமானால் நல்லது.
- மணக்குள விநாயகரை அன்னை **happy being** சந்தோஷமான ஜீவன் என்றார்.
- ஞானானந்தரையும் அது போலவே விவரித்தார்.
- "அன்னை போல எவரும் சிரிக்க முடியாது" எனப் பலரும் கூறுவர்.
- சந்தோஷம் க்ஷணமும் நிலைக்காது எனவும் பொங்கிவரும் நிரந்தர சந்தோஷம் 'வாயில்' எனவும் கூறுவது முரண்பாடு.
- பைத்தியம் தெளிய கல்யாணம் செய்ய வேண்டும் எனில் எப்படிச் செய்வது. கல்யாணப் பேச்சு சற்று சந்தோஷம் தருமானால் அதைத் தொடர்ந்து பைத்தியம் தெளியும்.

  *நல்லெண்ணம் வலிமையானவர் பேசினால் அது முடியும்.*
- நமது சந்தோஷம் நம்மைச் சந்தோஷப்படுத்துவது சுயநலமான சந்தோஷம்.
- பரநலமான சந்தோஷம் அழிந்தாலும் மீண்டும் எழும்.
- பரநலமான சந்தோஷம் பெற்றவர் மூன்று வகை 1) அவர் விலகுவார் 2) கொடுத்தவர் சந்தோஷம் அழியும் 3) கொடுத்தவர் சந்தோஷம் வளரும்.

- இம்மூன்றாம் வகையினரில் ஆரம்பித்து அடுத்தவர்களுடன் தொடரலாம்.
- *கொடுப்பது பரநலம் வளர உதவுமானால், எழும் சந்தோஷம் பொங்கும்.*
- இப்படிப்பட்டவரைக் குழந்தைகள் நாடும்.
- குழந்தைகளிடம் இதை எளிதில் காணலாம்.
- **AID** பொருளாதார உதவி பெறும் நாட்டை அபிவிருத்தி செய்ய உதவியதில்லை. ஒரு நாடு **AID** கொடுத்து அதைப் பெறும் நாடு அதனால் சுபீட்சமானால் அந்த நாடு எதிர்காலத் தலைவனாகும்.
- தாயின் பாசம் **(Physical love)** உடலில் இது போன்றது.
- உயிரால் இணையும் கணவன் மனைவி அது போன்றவர்.
- எலிசபெத் ஜேனிடம் அது போன்ற பாசம் உடையவளாதலால் ஜேன் வாழ்வு மலர்ந்தது.
- **Sydney Carton** சிட்னி கார்டன் காதலியின் வாழ்வு மலர உயிரைக் கொடுத்து அவள் காதலனைக் காப்பாற்றினான்.
- **Cheerfulness** சந்தோஷம் யோகத்திற்குப் பெரிய அஸ்திவாரம்.
- சமர்ப்பணம் சந்தோஷம் தருவதால் சந்தோஷமானவர்க்கு சமர்ப்பணமும் தேவையில்லை.

**உலகம் சந்தோஷத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டது.**

### ஜீவிய மணி

*படிப்பு முடிந்ததும் வேலை தேடும் இளைஞன் தனக்குள்ள திறமைகள் என்ன, சிறப்புகள் என்ன, நாட்டிற்கு எத்திறமைகள் தேவைப்படுகின்றன, எங்குத் தேவைப்படுகின்றன, எந்த ரூபத்தில் தேவைப்படுகின்றன என ஆராய்ச்சி செய்தால்தான் எதிர்பார்க்கும் வருமானத்தைப் போல் பல மடங்கு சம்பாதிக்கும் வாய்ப்பு பல வகைகளில் நாட்டில் மலிந்திருப்பதையும், அதற்குரிய இளைஞர் கிடைக்காததையும் அறிவான். ரிடையராகும் நேரம் சம்பாதிக்கும் வருமானம் இன்றே பெறலாம் எனத் தெரியும்.*



## அஜெண்டா

**பிரம்மாண்டமான திட்டங்களின் தரிசனம்.**

**இவை இனி சித்திக்கப் போகும் திட்டங்கள்.**

**That மனிதனில் that ஆக பரிணாம வளர்ச்சி பெறுவது.**

**மூலத்தை எட்டுவதும் மனித வளர்ச்சியும், பல ஜென்ம பலன் சில நிமிஷங்களில் பெற முடியும்.**

**மகேஸ்வரி மனிதனுக்குரியவாறு எடுக்கும் ரூபம்.**

- பகவான் கனவில் இந்திய கனிப்பொருள் மண்ணில் மண்டியிருப்பது வந்தது.
- நாம் நினைப்பதெல்லாம் தள்ளிப்போனாலும், நினைக்காத-தெல்லாம் **That** முன் ரூபமாக வரும்.
- பிரம்மாண்டமான திட்டம் எனில் நாமறிந்தவற்றைப் பெரியதாகக் கருதுகிறோம். அது அதுவன்று.
- வானம் நிறையுமளவு பகவான் தலை திருஷ்டியில் தெரிந்தால் பிரபஞ்ச ஜீவியம் சத்திய ஜீவியமாகும்.
- மனிதன் மூலத்தை எட்ட விரும்பினால் அதற்கு வழி பிறக்கும்.
- தான் வளர விரும்பினால் அது அகலவாட்டு வளர்ச்சி பிரபஞ்சத்தை நிரப்புவது.
- மகேஸ்வரி ஞானத்தின் அம்சம். பகவான் தலை **Outline-**ஆகத் தெரிவது மகேஸ்வரி அம்சம்.
- பள்ளியில் புத்தகத்தில் படிப்பது படிப்பு. மகேஸ்வரியின் ஞானம் கல்லும் புல்லும் ஞானம் பெறுவது.
- அது ஜோதியாய் தெரியும்.
- வேத காலத்தில் காயகல்பம் பெற்றவர் நாட்டில் எங்குமிருக்கலாம் என அன்னை கூறுகிறார்.

- *திருஷ்டி ஒருவருக்குச் சித்தித்தால் அவருக்கு அந்த ரிஷிகள் உள்ள இடம் தெரியலாம்.*
- ஆரம்ப நாட்களில் பகவான் **automatic** கை தானே எழுதுவதைப் பயின்றார். இறந்தவர்களை - தகப்பனார், தாயார், பரமஹம்சர், விவேகானந்தர் போன்றவர்கள் - அழைத்தால் அவர்கள் கூறுவதை பகவான் கையெழுதும். அந்த நாட்களில் அதை ஒரு வெளியீடாக திருச்சியில் பிரசுரம் செய்தனர். பகவான் இவை சூட்சும உலகுக்குரியன. அதனால் ஆன்மிக சத்தியம் எனக் கூற முடியாது என்று கூறியுள்ளார்.
- தரையில் விழுந்த பழம் கிளையில் போய்ச் சேர்வது தெய்வீக மனசக்தி. திருஷ்டியில் அச்சக்திகள் செயல்படுவது தெரியும்.
- சத்திய ஜீவியத்தில் நமக்கு வேண்டும் என்ற பொருட்களை நாமே செய்யும் திறமை நமக்குண்டு என்றால் நம்மால் பேனா, பழம் செய்ய முடியுமா? நாம் பேசும்பொழுது நமக்குத் தேவையான சொற்களை நாமே உற்பத்தி செய்வது மனத்தளவில் தெரிகிறது. இந்த மகேஸ்வரி திருஷ்டி ஏற்பட்டால் மனிதன் அது போன்ற சக்தியைப் பெற்றிருப்பது தெரியும். நம் திருஷ்டியில் ஒருவர் வந்தால் அவர் எழுத நினைத்தால் அவர் கையில் பேனா வரும். அது அவரால் செய்யப்பட்டதாக இருப்பது நமக்குத் தெரியும். ஏகன் அநேகன் என்ற கருத்து சித்தித்தால் நாம் காணும் ஒருவருள் உலகம் தெரியும் - கிருஷ்ணன் வாயுள் உலகம் தெரிந்தது போல் - அது சத்திய ஜீவிய சித்திகளில் ஒன்று. வீசும் காற்று கீதமிசைக்கும்.
- *மகேஸ்வரியின் சித்தி இருளை அடர்ந்த ஒளியாகக் காட்டும்.*
- **Mahayogi Sri Aurobindo** என்ற சிறு புத்தகம் **R.R. Diwakar** எழுதி பாரதிய வித்யா பவனால் பிரசுரிக்கப்பட்டது. அதை ஒருவர் வாங்கிப் படித்தார். காலை 4 மணிக்கு எழுந்து ஸ்விட்ச் போட நினைத்தார். அறை முழுவதும் வெளிச்சமா-யிருந்ததால் ஸ்விட்சைப் பார்த்தார். அது போடப்படவில்லை.



இது போன்ற பல அனுபவங்களை அன்பர்கள் அறிவார்கள். இத்தலைப்பு கூறுவது இதுவரை உலகமறியாதது. நாம் எப்படி அதைக் கூற முடியும். கூறமுடியாவிட்டாலும் அது முழுவதும் தெரிய முடியாததல்ல எனவும் கூறுகிறார். ஜோதிமயமான பிரம்மாண்டமான விசாலம் (**vast comprehensive luminous space**) என்று வேதம் கூறுவது நினைவு வந்தால் பூமி ஒரு சிறு பொருளாகி பிரபஞ்சம் ஜோதிமயமானது க்ஷணம் தெரியும். கண்ட அன்பர்களுண்டு. இவை ஆன்மிக திருஷ்டி. அன்பர்கட்கு இதை வாழ்க்கைப் பலனாக நான் இதுவரை கூறியுள்ளேன். இந்த திருஷ்டி ஒருவருக்கு வியாபாரத்தில் பலித்தால் நான்கு வருஷ வியாபாரம் ஒரே ஆர்டரில் வரும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தச் செயலிலும் பல அம்சங்கள் உள்ளன. செயலுக்கு ராசியுண்டு. செய்பவருக்குப் பர்சனாலிட்டியுண்டு. பெறுபவர் தம் சுபாவத்தில் பெறுகிறார். செயலின் பலனில் ராசி, பர்சனாலிட்டி, சுபாவம் வெளிப்படும். வேலைக்கு ஆள் கிடைக்காத காலத்தில் நூறு ரூபாய் வேலைக்கு ஆயிரம் ரூபாய் போனஸ் தந்து அழைத்த ஸ்தாபனத்திற்கு வந்தவர் வேலையை ஏற்றார். போனஸை மறுத்துவிட்டார். இரு ஆண்டுகட்குப் பின் அவருடைய வருமானம் மாதம் ரூபாய் ஆயிரம் ஆயிற்று. ராசி, பர்சனாலிட்டி, சுபாவம் சேர்ந்து செயல்படும் வகை.

- பழைய பழக்கம் என விலக்குதல் அவசியமில்லை.
- ஊழல் புதிய பழக்கம் என்பதால் ஏற்க வேண்டுமென்பதில்லை.
- நல்லதை ஏற்று உயர்ந்ததுடன் இணைத்துப் பலன் பெறுவது சரி.
- பழைய நிலை சிருஷ்டி, புதிய இயக்கம் பரிணாமம்.

சிருஷ்டி பரிணாமத்தால் அன்றாட நிகழ்ச்சிகளை அற்புதமாக்கும் திறன் பெறுகிறது. பழைய நிலை இருளான தீமை, புதிய வாய்ப்பு பரமாத்மா. இவை இணைந்து தெய்வீக வாழ்வாக மிளிர்கிறது.

## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

22. நாம் ஏற்றுக் கொண்டுள்ள பண்புகள் இரசனைகள் மற்றும் பழக்கவழக்கங்களுடன் ஒத்துப் போகின்ற மனிதரை நாம் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அத்தகைய திருமணம் நாம் எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்கும். இப்படியில்லாமல் இருவருடைய பண்புகளும், இரசனைகளும், பழக்கவழக்கங்களும் மாறுபட்டிருந்தால் திருமண உறவு கசப்பான அனுபவமாக மாறிவிடும்.

- சுமுகம் இனிமையை உற்பத்தி செய்யும்.
- பிணக்கு கசப்பை ஏற்படுத்தும்.

ஒரு தொழிலதிபர் ஜெர்மனிக்குப் போனார். அவரால் ரொட்டி, உருளைக்கிழங்கு சாப்பிட முடியவில்லை. **South Indian Restaurant** எங்குள்ளது எனக் கேட்டார். அது தென்னிந்தியாவில் உள்ளது. கையில் கொண்டுபோன எலுமிச்சம் ஊறுகாயை சாப்பிட்டார். 2 நாளில் திரும்பி வந்து விட்டார். ரொட்டி, கேக், மாமிசம் (அவர் மாமிசம் சாப்பிடுபவர்) **wine** (அவர் குடிப்பவர்) அந்நாட்டார் சாப்பிடுகிறார்கள். நாம் அங்கிருப்பது ஒரு வாரம், 10 நாட்கள். இந்தச் சாப்பாட்டை ஏராளமான இந்தியர்கள் சாப்பிடுகிறார்கள். அது நல்ல உணவு. சாப்பிட முடியாது என்பதில்லை. அவரால் அதை ஏற்க முடியவில்லை.

**சுமுகமாக இல்லாவிட்டால் வாழ்க்கை இனிமையாக இருக்காது. எப்படியாவது வாழ்வது வாழ்வில்லை.**

கணவன் பச்சைப் புடவையைக் கட்டிக் கொள்ளச் சொன்னால் மனைவி சிவப்புப் புடவையைக் கட்டிக் கொண்டு வந்தால், சண்டை ஏற்பட்டு முற்றி பல நாட்கள் பேசாமலிருப்பதுண்டு. தாய் வீட்டிற்கும் போவதுண்டு. ஒரு மெஷினில் கிரீஸ் (**grease**) போடவில்லை என்றால் மெஷின் வேலை செய்யும், சூடாகி கம்பி உடையும். தோசை சாப்பிடுபவருக்குச் சப்பாத்திக் கொடுத்தால் அன்று முழுவதும் குணம் கெட்டு வேலை கெடும்.



காலையில் எழுவது நல்ல பழக்கம். 7 மணிவரை தூங்குவது நல்லதல்ல. எழுந்தவுடன் குளிக்கும் வீட்டிலிருந்து 9 மணிக்குக் குளிக்கும் வீட்டிற்கு வந்தால் காலில் சகதியை மிதித்தது போன்ற உணர்வு ஏற்படும். தாராளமாக செலவு செய்பவரும், கருமியும் கணவன் மனைவியானால் செலவு நடக்கும் பொழுது கருமிக்கு உயிர் போவது போலிருக்கும். முதல் மார்க் வாங்காவிட்டால் தூக்குப் போட்டுக் கொள்பவரும் 3 முறை பெயிலாகி பாஸ் செய்தவரும் திருமணம் செய்து கொண்டால் *மன வேதனை பெரிய வேதனையாகும்*. கடன் வாங்குவது தவறு, மட்டம், கேவலம் என்பவர் கடன் வாங்குவதற்குப் பெருமைப்படுபவரை மணந்து அவதிப்படுவதுண்டு. ‘நீங்கள்’ எனப் பேசத் தெரியாமல் நீ என்று பேசுபவரும், டிரைவரையும் நீங்கள் என்பவரும் இணைவது மானம் போகும். சென்னையில் போர்ட்டர் தென் ஜில்லாவாசியை ‘நீ எங்கே போறே’ என்று கேட்டு கன்னத்தில் அறை வாங்கியது நடந்த நிகழ்ச்சி.

ஜாதியை மேல்நாட்டார் ஆராய்ச்சி செய்து ஜாதிகள் வேறுபடுவதில் முக்கியம் சாப்பாடு, சம்பிரதாயம் எனக் கண்டனர். காப்பி சாப்பிடும் வீட்டிலிருந்து காப்பி சாப்பிடாத வீட்டிற்கு வந்த தம்பதிக்கு நாள் போவது உயிர் போவதாகும். எதிர்வீட்டிற்குப் போனாலும் சொல்லிவிட்டுப் போகும் பழக்கம், எங்குப் போனாலும் ஊருக்குப் போனாலும் சொல்லாமல் போகும் பழக்கம் ஒத்து வராது. பழக்கங்கள் மாறும் காலத்தில், கிராமத்திலிருந்தவர்களுக்குச் சென்னையில் மாறிய பழக்கங்கள் உள்ள இடத்தில் மரியாதை, சுத்தம் மாறுபடுமிடத்தில் எளிதில் ஒத்துப் போகாது. அஹிம்சாவாதி ஜனாதிபதி. அஹிம்சாவாதி, கவர்னர் மீனும், சிகரெட்டும் தரவில்லை என கவர்னரை டிஸ்மிஸ் செய்தார். மாமியார், மருமகள் போராட்டம் நெடுநாளையது. இராகுகாலம், எமகண்டம், சுப முகூர்த்தம், பள்ளிப்படிப்பு, டிரஸ், சாப்பாடு — பச்சடியா, பொரியலா என்ற வேறுபாடு — சுமுகத்தைக் குறைக்கும். இவற்றிற்குப் பின்னணியாக வாழ்க்கைத் தத்துவங்கள் ஏராளமானவை உண்டு.

- *சாப்பாடு மாறினால் சாப்பிட்டது போலிருக்காது.*

- *பழக்கமற்ற டிரஸ் போட்டவருடன் பழக்கம் எளிதில் விட்டுப் போகும்.*
- *மரியாதை மாறினால் உறவு முறியும். ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாது.*
- *நேரம் மாறினாலும் சாப்பாடு சாப்பாடாக இருக்காது.*
- *இரகஸ்யமானவர், அது இல்லாதவரிடம் பழக முடியாது.*
- *தன்னை உயர்ந்தவராக நினைப்பவருக்கு நட்பு ஏற்படாது, ஏற்பட்டால் நிலைக்காது.*
- *பழக்கம் மாறியதை தவறானவர் என நினைத்து உறவு முறியும்.*
- *Portion-இல் குடியிருந்து பழக்கப்படாதவர் அப்பழக்கம் உள்ளவரைக் கேவலமாக நினைப்பார்கள்.*
- *பழக்கத்தைக் கொண்டு மனிதனைக் கணிப்பது தவறு. அனைவரும் செய்வது அது.*
- *தலையை எப்படி வாரிக் கொள்வது என்பதில் சண்டை ஏற்பட்டு முற்றிவிடும்.*
- *நகரத்துவாசிக்குக் குளத்தில் ஆற்றில் குளிப்பது அநாகரிகமாக இருக்கும்.*
- *ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசி சண்டை எழுவதுமுண்டு.*
- *குழந்தைகள் நம் குறைகளை வெளியிட்டுவிடுவதால் கணவன் மனைவிக்குள் டென்ஷன் வழக்கமாக வரும்.*
- *காரிருந்த வீட்டிலிருந்தவரும் கார் இல்லாத வீட்டாரும் சம்பந்தம் செய்தால் பேச்சில் 'கார்' வந்தபடியிருக்கும். வந்தால் சண்டை வரும்.*
- *வெந்நீரில் குளிக்கக் கூடாது என வாக்குவாதம் தினசரியும் வரும்.*
- *எந்த ஊறுகாய் உயர்ந்த பழக்கம் என்ற பேச்சைத் தவிர்க்க வேண்டியது நெடுநாளைய பண்பு.*
- *பூஜை அறை, சமையல்கட்டு வித்தியாசத்தைப் பெரிதுபடுத்தும் இடங்கள்.*
- *கலகலப்பான குடும்பத்தை மரியாதை இல்லாத குடும்பம் என நினைப்பதுண்டு.*

(தொடரும்)



## ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

5. **அபிப்பிராயத்தை ஏற்கும் அறிவிலியாகாமலிருக்க எண்ணம் எந்த அம்சத்தில் சரி எனக் கண்டு, அதன் நேர் எதிரானது எங்கு உண்மை எனக் கண்டு இம்மாறுதலுக்குரிய காரணத்தை அறிந்தால், இறைவனின் சுமுகம் எழும்.**

மனிதன் நடக்கும் நிகழ்ச்சிகளை அவன் அறிவுக்குட்பட்ட அளவில் புரிந்து கொள்கிறான். வாழ்க்கை அளவோடு திட்டமிட்டதாய் நடக்கும்பொழுது இது சரி. பரீட்சைக்கு பெரும்பாடு பட்டுப் படித்தேன், முதல் மார்க் வந்தது என்பது தெளிவு. எலக்ஷனில் பெருந்தலைவரை எதிர்த்து நின்றேன். தோற்றேன். திருமண வயது வந்தபின் பணமும் அழகு-மிருப்பதால் எளிதில் மணம் முடிந்து விட்டது, இல்லாததால் வரனே வரவில்லை என்பது போல் ஏராளமான நிகழ்ச்சிகள் இயல்பாக நடக்கின்றன. சாப்பாட்டுக்கு வசதியற்ற குருக்கள் பெண்கள் வசதியாக வாழ முடியாது. சவுக்கு மட்டும் பயிராகும் நிலம் அந்த நாளில் மார்க்கெட் விலைக்குப் போவதற்குப் பெருமுயற்சி வேண்டும். முயற்சி பலிக்கும் எனக் கூற முடியாது. என் நிலத்தைச் சுற்றி போர் கிணறு போட்டவர்கட்கு ஆரம்ப முயற்சி எல்லாம் தோற்று விட்டது. நானோ அதிர்ஷ்டக்கட்டை. நான் எளிதில் வெற்றி பெற முடியுமா? எங்கள் வீட்டில் எவருக்கும் படிப்பு வரவில்லை, நான் மட்டும் எப்படி டிகிரி எடுக்க முடியும்? Mr.பென்னெட் பெண்கள் இராணுவ ஆபீசர்-களை எதிர்பார்த்து ஏமாந்தவர்கள். அதனால் 23 வயது வரை பெண்ணுக்கு வரன் வரவில்லை. "நானும் இப்பெரிய ஸ்தாபனத்தில் முக்கிய பதவியில் இருக்கிறேன். பல புத்தகம் வெளியிட்டிருக்கிறேன். வசதியான பலர் வந்து என்னை சந்திக்கிறார்கள். ஆனால் எவரும் புது நூல் வெளியிட பண

உதவி கேட்டால் நடக்கவில்லை” என்பன போன்றவற்றை அடுக்கலாம். பகவான் இரு பக்கங்களையும் கண்டு, அவற்றை சுமுகமாக இணைத்தால் இறைவனின் திருவுள்ளம் தெரியும் என்கிறார். மனிதன் தன் அபிப்பிராயமே முடிவு என்று நினைக்கிறான். அதன் பலனைப் பெறுகிறான். அதைக்கடந்த அடுத்த பக்கம் உண்டு. வாழ்வு அங்குள்ளது. அது மனித அஞ்ஞானத்தின் மறுபுறம். *ஆண்டவன் சுமுகம் எழுந்து பலன் தரும் நிலையது என்பதை மனம் அறியவில்லை*. மேலே சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டேன். அவை எப்படி மலர்ந்தன என்பதை விளக்க எந்த உயர்நிலையிலிருந்து பெரும்பாலான பலன் வந்தது என்பதைக் குறிப்பிடுகிறேன். காலம் மாறினால் அதுவும் உயர்ந்தால் அந்நிலை எழும். உலகில் நாம் செயல்படும் துறை பரவும் நேரமானாலும் அந்த உயர்நிலை மனித அறிவுக்குப் பலனாக எழுந்து முன் வரும். தொழில் நாட்டில் பரவும் நேரம் பேங்க் (**Bank**) உதவ முன்வரும். நம் நிலம் உள்ள இடத்தில் ரோடு வரப்போவது நமக்குத் தெரிந்தபின் நிலம் விலை போவது நமக்குத் தெரியாவிட்டாலும் சூட்சுமமானவர்க்கு அச்சூட்சுமங்கள் மனதில் படும். பிரான்சில் புரட்சி நடந்தால் இங்கிலாந்தில் உள்ள பணக்காரர்கட்கு ஆபத்து என விளங்கும். அதனால் அதிர்ஷ்டம் வரும் எனப் புரியும் அறிவு நமக்கில்லை. பக்கத்து வீட்டுக்காரரிடம் மரியாதையாகப் பழகி மனத்தால் துரோகமிழைத்ததால் பலன் அவரால் நமக்கு வரும் என அறிவிலி நம்புவான். அறிவுள்ளவன் “யார் மூலம் எனக்கு வசதி வந்தாலும் பக்கத்து வீட்டுக்காரரால் வராது” என அறிவான். வாழ்வு மலரும்பொழுது நாட்டிற்குச் சுதந்திரம் வந்தபின், பெண் உரிமையை உலகம் ஏற்றபின், முதலாளி அடக்குமுறையை கைவிட்டபின், நிலைமை சாதகமாக அனைவருக்கும் மாறுவது, மாறியபின்னும் தெரியாது. *பகவான் கூறுவதுபோல் இருபுறமும் சோதனை செய்தால், நிலைமையுயர்ந்து நல்லது எழும். அது ஆண்டவன் சுமுகம்*. எங்கள் குடும்பம் பரம்பரையாக பக்தியுள்ளது, அதனால் புதுநிலை எழும் என்பது குருக்கள் வீட்டார் அறியாதது. *அவர்கள் அறியாத அப்புது நிலை - அன்னை அளிப்பது - ஆராய்ச்சியையும் அவர்கட்காக செய்து பலன் தந்தது*.



கெட்ட எண்ணத்தைச் செயல்படுத்தும்பொழுது அதைவிட ஆழமாகப் புதைந்துள்ள நல்ல எண்ணம் எழுந்து தரிசனத்திற்கு அழைத்துப் போய் நல்ல பலனைத் தந்தது. பிரெஞ்சுப் புரட்சியை அறியாத பென்னட் பெண்கட்கு அது பலனளித்தது. அதிர்ஷ்டக்கட்டையானாலும் கடைக்குச் சரக்கு வாங்க அடிக்கடி புதுவை போகும் பாக்கியத்தை அவர் அறியாவிட்டாலும் அது பலன் அளித்து பாஸாக முடியாத பையன் நான்கு பாடங்களில் முதல் மார்க் வாங்கும் திறமையுடையவன் என்று தெரிய வந்தது. அத்திறமை நேரம் வரும்பொழுது எழுந்து வந்து திருவுள்ளத்தைச் செயல்படுத்தும். மணம் செய்ய பணமில்லாவிட்டாலும் வேலை செய்யுமிடம் அன்னைக்குரிய இடம் என்பதால், அதிர்ஷ்டம் எழும் வாய்ப்பு அது. நம் குறைகள் நமக்குத் தெரியும். நம் அபிப்பிராயம் நம் குறையை வற்புறுத்தி அதற்குரிய பலனைத் தரும். *குறை நிறையின் மறுபுறம்*. மனம் மறுபுறத்தை நாடினால் குறை தடம் புரண்டு நிறையாகும். நிறைக்கு நேரம் வந்தால் இறைவன் செயல்படுவார். அது திருவுள்ளம்.

(தொடரும்)

## ஜீவிய மணி

*உழைப்புடன் அறிவும், திறமையும் சேர்ந்த பொழுது எதையும் சாதிக்க முடியும் என அமெரிக்கர் கண்டனர். 10 மாடிக் கட்டடம், 20 மாடிக் கட்டடம் கட்டினர். ஆயிரமாயிரம் மைல் போகும் இரயில்வேயும் போட்டனர். 800 பல்கலைக்கழகங்களை நிறுவினர். படிப்பு பரவி மலிந்தது. உழைப்பு உயர்ந்தது. செல்வம் பெருவெள்ளமாகப் பெருகியது. இரண்டாம் போரை வெல்ல எல்லா தளவாடங்களையும் உற்பத்தி செய்தனர். போரை வெல்ல வழிவகுத்தனர். இன்று உலகத் தலைமை 60 ஆண்டுகளாக அவனிடமிருக்கிறது. எதனால் அமெரிக்கா இச்சிறப்பைப் பெற்றது? உழைப்பு, அறிவுடை உழைப்பு அதற்குரிய பதில். அதற்கும் மூலமாக அங்குள்ளது தனிமனிதன் பெற்ற சுதந்திரம், தன் மரியாதையின் வழி வந்த சுதந்திரம், சுதந்திரம் தரும் தன்னம்பிக்கை, சுயமரியாதை -* **individuality**.

# The Life Divine – Outline

## தமிழ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

*அத்தியாயம் 19 - வாழ்வு*

மரபு வாழ்வு அநித்தியம், விலக்கப்பட வேண்டியது எனக் கூறுகிறது. *வாழ்வு மனம் உற்பத்தி செய்த சக்தி லோகம் என பகவான் கூறுகிறார்.* முக்கியமாக உடல் உணர்வை வாழ்வு எடுத்துக்கொண்டு போய் மனத்திடம் கொடுத்து எண்ணமாக மாற்றி, அவ்வெண்ணத்தால் உடலை மனம் ஆள உதவுவது வாழ்வு எனப் பகவான் கூறுகிறார்.

*அத்தியாயம் 20 - மரணம், ஆசை, இயலாமை*

மரபுக்கு வாழ்வு பிறப்பில் ஆரம்பித்து இறப்பில் முடிகிறது. வாழ்வு பிறப்புக்கு முன்னும், மரணத்திற்குப் பின்னும் உள்ளதாக பகவான் கூறுகிறார். மரணம் தவிர்க்க முடியாதது என்பது மரபு. மரணத்தை வென்று மரணமிலா பெருவாழ்வு வாழலாம் என்றார் பகவான். *வாழ்வுக்கு மரணம் நித்தியத்துவம் அளிக்கிறது எனக் கூறுவது ஸ்ரீ அரவிந்தம்.*

*அத்தியாயம் 21 - வாழ்வின் உயர்வு*

மரபு வாழ்வைப் பற்றியோ, மனத்தைப் பற்றியோ, உடலைப் பற்றியோ எதையும் நாம் ஏற்க வேண்டும் எனக் கூறவில்லை. இவை தவஸிக்கு விலக்கு. ஆசை போராடி உயர்ந்து அன்பாகிறது என்று பகவான் கூறுகிறார். வாழ்வு ஆனந்தத்தை நாடி உயரும்பொழுது ஆசை முதற்கட்டம், அன்பு அடுத்த கட்டம், முடிவானது ஆனந்தம்.

*அத்தியாயம் 22 - வாழ்வின் பிரச்சனை*

சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளது வாழ்வின் பிரச்சனை. பரிணாமத்தால் உயர்ந்து சக்தி ஜீவியத்துடன் சத்திய ஜீவியத்தில் இணைய வேண்டுவது தீர்வு.



*அத்தியாயம் 23 - சைத்திய புருஷன்*

மரபுக்கு ஆத்மா முக்கியம். அதைப் புருஷன் என்றனர். மேல் மனம் நிஷ்டையில் உள் மனம் சென்றால் அங்குப் புருஷனைக் காணலாம். அப்புருஷன் உயர்ந்து மேலே பிரம்மத்திற்குப் போகக்கூடியவன். அப்படிப் போவது மோட்சம். அதையே மரபு நாடியது. மரபு சைத்திய புருஷனையறியும். இதயக் குகையில் கட்டை விரல் பிரமாணம் உள்ளது என உபநிஷதம் கூறினாலும், பக்தி யோகத்தில் சைத்திய புருஷன் முன்வந்தாலும், மரபு சைத்திய புருஷனை முக்கியமாகக் கருதவில்லை. பகவானுடைய யோகத் தலைவன் சைத்திய புருஷன். நம் மனம், வாழ்வு, உடல் இரண்டிரண்டாகப் பிரிந்துள்ளது போல் ஆத்மாவும் புருஷன், சைத்திய புருஷன் என இரண்டாகப் பிரிந்துள்ளது என பகவான் கூறுகிறார். *சைத்திய புருஷன் உள்ளே வளர்ந்து வெளியே வராத நிலையில் பாலவாதம், உன்மத்த வாதம், பிசாசவாத நிலைகள் எழுகின்றன.* இராமலிங்க சுவாமிக்கு உள்ளே முழுவதும், வெளியே ஓரளவும் சைத்திய புருஷன் வளர்ந்திருந்ததாகப் பொருள்படும்படி பகவான் எழுதுகிறார். இப்பகுதிகளிலிருந்த ஒருவர் என பகவான் கூறுவதை நான் இராமலிங்க சுவாமிகள் எனக் கொண்டேன். சுவாமி அருட்ஜோதி என்பது சத்தியஜீவியம் என அன்னை கூறியுள்ளார்.

*அத்தியாயம் 24 - ஜடம்*

ஆத்மா தன்னை பிரபஞ்சமாக மாற்றிய பின், மனம் ஆத்மாவை, அதாவது ஆத்ம சக்தியைக் காண முயல்கிறது. முடியும் என்றபொழுது தன் புலன்களால் ஆத்மாவின் சக்தியைக் காண்கிறது. *ஆத்ம சக்தி மனத்தின் புலனுடைய பார்வைக்கு ஜடமாகக் காட்சியளிக்கிறது.*

ஆத்மா உண்மையிலேயே தன்னை ஜடமாக மாற்றிக் கொள்கிறது. ஜடம் என நாம் காண்பது ஆத்மா. *மேலும் ஜடம் ஆனந்தமயமான ஜீவன்.*

*அத்தியாயம் 25 - ஜடத்தின் முடிச்சு*

ஜடம் ஆத்மா. அதை நாம் ஆத்மாவாகக் காண உள்ள தடைகள் 3. அஞ்ஞானம், தமஸ், பிரிவினை என்பவை தடை

செய்கின்றன. ஜடம் என ஒன்றில்லை. மனம் ஆத்மாவை ஜடமாகக் காண்கிறது. இன்றைய மனம் பிரிந்து, சோம்பேறியாய் அஞ்ஞானத்திலிருப்பதால் ஆத்மா ஜடமாகத் தெரிகிறது.

**மனத்தின் பார்வை மாறினால் ஜடம் என ஒன்றிருக்காது.**

*அத்தியாயம் 26 - படிப்படியாக உயரும் பொருளின் நிலை*

சிருஷ்டியால் உலகை வந்தடைந்த பிரம்மம் பரிணாமத்தால் மீண்டும் தன்னை அடைய உதவும் தத்துவங்கள் 7. ஒரு சமயம் ஒரு தத்துவம் மட்டும் செயல்படும். மற்றவை புதைந்திருக்கும்.

*அத்தியாயம் 27 - சப்த ஜீவன்*

சத்து, சித்து, ஆனந்தம், சத்திய ஜீவியம், மனம், வாழ்வு, உடல் ஆகியவை அவ்வேழு தத்துவங்கள். வேதம் இத்தத்துவங்களின் எண்ணிக்கையை 7 ஆகவோ 9, 10, 12 ஆகவோ கருதலாம் எனக் கூறுகிறது. பகவான் அவற்றை 8-ஆகக் கருதலாம் என்கிறார். அவர் சேர்த்த புதிய தத்துவம் சைத்திய புருஷன். இதை உடலுக்கும் வாழ்வுக்குமிடையே வைத்துள்ளார். *மேல் 4 தத்துவங்கள் தலைகீழே மாறி கீழ் நான்கு தத்துவங்களாயின என்கிறார்.*

| | |
|---|---|
| சத் | ஜடம் |
| சித்-சக்தி | வாழ்வு |
| ஆனந்தம் | சைத்திய புருஷன் |
| சத்திய ஜீவியம் | மனம் |

*அத்தியாயம் 28 - சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை*

சுவாமி விவேகானந்தர் பகவானுக்கு ஜெயிலில் கையில் கீதையைக் கொடுத்து மௌனமாக செய்த உபதேசம்: *மோட்சம் இலட்சியமில்லை. சத்திய ஜீவியமே இலக்கு என்பது.*

பகவான் அவதார புருஷராக இறைவன் வரும் தருணத்தை உலகுக்கு அறிவிக்கப் பிறந்தவர். அவர் தகப்பனார் 1872-இல்



பகவான் பிறந்த காலத்தில் ஆங்கில மோகத்தில் தன்னை இழந்து "என் மக்கள் ஆங்கிலேயராக வளர வேண்டும். அவர்கள் போல் உடுத்த வேண்டும். ஆங்கிலம் பேச வேண்டும். தாய் மொழி வங்காளம் அவர்கள் காதில் விழும்படி பேசக் கூடாது. ஆங்கிலப் பள்ளிகளில் பயின்று ஆக்ஸ்போர்ட், கேம்ப்ரிட்ஜில் படிப்பை முடிக்க வேண்டும்" என்று சபதமேற்றவர். ஏற்ற சபதத்தை நிறைவேற்ற பகவானுக்கு 7-ஆம் வயதில் டார்ஜிலிங் ஆங்கிலப் பள்ளியில் சேர்க்க அவர் வீட்டில் தயார் செய்யப்பட்டார். 7-ஆம் வயது முதல் 21-ஆம் வயது வரை இங்கிலாந்தில் I.C.S. பயில வேண்டி முதலில் ஒரு பாதிரியார் வீட்டிலும், அடுத்தாற்போல் கல்லூரி ஹாஸ்டலில் இருந்தும் பயின்றார். I.C.S. பரீட்சை முடியும் முன் கனவில் ஒரு சன்னியாசி தோன்றி திரிசூலத்தைக் கையில் கொடுத்தார். I.C.S. பரீட்சையை முடிக்காமல் பகவான் பம்பாய் வந்து இறங்கியபொழுது தான் இலண்டனிலிருந்து புறப்பட்டபின் தகப்பனார் மாரடைப்பால் இறந்ததைக் கேட்டு கல்கத்தா போகாமல் பம்பாயிலும், பரோடாவிலும் வேலை பார்த்தபொழுது, *நாக சன்னியாசியின் மந்திரம் அவரை யோக மார்க்கத்திற்குத் திருப்பியது.* நாட்டுக்குச் சுதந்திரம் பெற யோகம் செய்ய முடிவு செய்து ஹட யோகத்தை 3 நாளிலும் ராஜ யோகத்தை 3 நாளிலும் முடித்தார். அந்நிலையில் சர்க்கார் அவரை சிறையிலடைத்தது. சுவாமி விவேகானந்தர் உபதேசம் சத்திய ஜீவிய முதல் அடிப்படை சித்தியாக விஸ்வரூப தரிசனம் கிடைத்தது. *இது அர்ஜுனன் பெற்றதல்ல.* அது நல்லதும் கோரமுமான இரு தரிசனங்கள். பகவான் பெற்ற தரிசனத்தில் கோரம் அழிந்தது. விடுதலையாகி புதுவை வந்தவர், சத்திய ஜீவியத்தை நிலையாக எட்டி, உலகுக்கு வரச் செய்யும் முயற்சியை ஏற்றபொழுது எப்படி சத்திய ஜீவியத்தை நிலையாக எட்டுவது என அறிய 10 ஆண்டுகளாயின.

**அவர் கண்ட சூட்சுமம்:** மேல் மனத்திலிருந்து உயரே பிரம்மத்தை நோக்கிப் போனால் அது மோட்சத்தில் முடியும். மாறாக கீழே உள் மனம் வழியாக அடி மனம் சென்று சைத்திய புருஷனையடைந்து, அங்கிருந்து உயர்ந்து முனி, ரிஷி, யோகி,

தெய்வ நிலைகள் மூலம் பொன்மூடியைக் கடந்து சத்திய ஜீவியத்தை அடைய வேண்டும் எனக் கண்டதை இந்த 28-ஆம் அத்தியாயத்தில் "நான் தேடிய சூட்சும இரகஸ்யம்" எனக் குறிப்பிடுகிறார். இந்த 28-ஆம் அத்தியாயம் 1914 முதல் 1922 முடிய ஆர்யா பத்திரிக்கையில் எழுதிய **The Life Divine**-இல் இல்லை. பின்னர் 1940-இல் **The Life Divine** புத்தகமாக வெளிவந்த பொழுது பகவானால் எழுதி சேர்க்கப்பட்ட மூன்று அத்தியாயங்களில் இதுவும் ஒன்று.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சாவித்ரி மகாபாரதக் கதை. சாவித்ரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்டாள். புதிய ஆன்மிக வாய்ப்பு சத்திய ஜீவியம். 'சாவித்ரி'. பகவானுடைய காவியத்தில் சாவித்ரி சத்தியவானை எமனிடமிருந்து மீட்டு எமனை அழிக்கிறாள். இருண்ட எமனை ஒளிமயமான தெய்வமாக்குகிறாள். சாவித்ரியின் குரலைக் கேட்ட எமன் திகைப்படைகிறான். "நீ யார்? லோக மாதாவா? உன் திருமுக தரிசனம் தருவாயா?" எனக் கேட்கிறான். அவள் தரிசனத்தால் உலகில் மரணம் அழிகிறது.

பழைய நிலை மனித சுபாவம், புதிய வாய்ப்பு இன்டர்நெட். மக்கள் இன்டர்நெட்டால் பெறும் பலன் பெரியது. எளிய சிறு பெண் எழுத்தாளராகி விமர்சன கர்த்தாவாகி பெரிய கம்பெனிகளுக்கு சேவை செய்ய முடிகிறது. பழைய சாமான் விற்கும் கடை இன்டர்நெட்டால் உலகப் பிரசித்தி பெற்ற பில்லியன் டாலர் கம்பெனியாகிறது. **சாரம் + வாய்ப்பு = அற்புதம்.**

**பழையது பெரியது.**
**புதியது அதனினும் பெரியது.**
**பழையதின் வலிமையும் புதியதின் சிறப்பும் சேர்வது அளவு கடந்த சிறப்புடையது.**
**அது அன்பர் போற்றும் அன்னை வாழ்வாகும்.**
**அன்னை வாழ்வு ஸ்ரீ அரவிந்தரின் புன்னகை மலர்.**



# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

62 வயதான அமெரிக்கப் பெண்மணி தம் உறவினர்கள் ஆசிரமத்தில் வந்து கொஞ்ச நாள் தங்கியிருக்கின்றார்கள் எனக் கேள்வியுற்று, ஒரு மாதம் தம் வேலையிலிருந்து லீவு பெற்று, தாமும் ஆசிரமம் வர வேண்டும் என்று வந்தார். இங்குள்ள அமைதி அவரை ஆட்கொண்டது. இது போன்ற அமைதியுணர்வை தம் வாழ்நாளில் ஒரு நிமிஷம்கூடக் கண்டதில்லை என்பதைப் பல முறை பலரிடம் சொன்னார். தம் 3 வருஷ சர்வீஸை முன்னதாகவே முடித்துக் கொண்டு, அமெரிக்காவிலுள்ள தம் வீட்டைக் காலி செய்து, நிரந்தரமாக அந்த அமைதியை அனுபவிக்க வேண்டி, பாண்டிச்சேரிக்கே வந்துவிட்டார். அவரைவிட வயது அதிகமான இந்தியப் பெண்மணி ஒருவர் மாதம் ஒரு முறை சமாதி தரிசனத்திற்கு வந்து, ஒவ்வொரு முறையும் சில நாள் தங்குவார். ஒரு முறை நெடுநாள் தங்கி, "கடந்த 25 வருஷகாலமாக நான் பெறாத நிம்மதி எனக்கு இப்பொழுது இங்கே கிடைக்கிறது. அளவுகடந்த நிம்மதியுடனும், சந்தோஷத்துடனுமிருக்கின்றேன்'' என்று மகளுக்குக் கடிதமெழுதினார். "நிம்மதியும், சந்தோஷமும் கிடைத்தற்கரியவை. செல்வமும், பதவியும்கூட கிடைக்கலாம். கிடைத்தற்கரியவை உங்களுக்குக் கிடைத்திருப்பது பாக்கியம்'' என மகள் பதிலெழுதினார். பொதுவாகத் தம்மை வந்து அடைந்தவர்களுக்கு இயல்பாக அன்னை அளிக்கும் நிம்மதி என்ற பரிசு இது.

பயம், கவலை, சோகம், வறுமை, ஏமாற்றம், விரக்தி, சந்தேகம், சோர்வு போன்ற உணர்வுகள் ஒன்றோடொன்று கலந்து வரும். ஒன்று மற்றதை உற்பத்தி செய்யும். ஒன்று மற்றதை அதிகப்படுத்தும். நிம்மதியைக் குலைப்பது கவலை. எனவே முக்கியமாக நாம் கருத வேண்டியது கவலை. இது எப்படி ஏற்படுகிறது? இதை எப்படி அழிக்கலாம்? என்பதே

இங்குக் கவனிக்கத்தக்கது. என்றாலும், இரண்டாம்பட்சமாக மற்ற மேற்சொல்லிய குணங்களும் கலந்து வரும். அவற்றுள் பயம், சந்தேகம் முக்கியமானவை. நிம்மதியை ஏற்படுத்த முக்கியமாகக் கவலையையும், அடுத்தபடியாக பயம், சந்தேகம் ஆகிய இரண்டையும் எப்படி அழிப்பது என்று விளக்கமாகக் கருது-வோம். நிம்மதியை நேரடியாக அதிகப்படுத்தும் முறைகளையும், அதற்கு எதிரானவற்றை அழித்து, அதன் மூலம் அதிகப்படுத்தும் முறைகளையும் சில உதாரணங்கள் மூலம் சொல்லலாம். பல நிகழ்ச்சிகளுக்குப் பொதுவான முறைகளை பொதுவாகவும், குறிப்பிட்ட உதாரணத்திற்கு மட்டும் தனிப்பட்ட முறைகளை அதனுடன் இணைத்தும் விளக்க முயல்கிறேன்.

ஒரு சாதாரண குடும்பத்துப் பெண் திருமணமாகி மாமியார் வீடு சென்றாள். மாமியாருக்கு மருமகளை அளவுகடந்து பிடித்து விட்டது. மற்ற 4 மருமகள்களையும் விட்டுவிட்டு மாமியார் தன் மகளிடம் செலுத்தாத அன்பையும் இந்த மருமகளிடம் காட்டினாள். கணவன், மனைவி மீது உயிரையே வைத்திருந்தார். 6 மாதம் கழித்து அப்பெண் தன் வீட்டிற்கு எழுதிய கடிதத்தில் இவற்றையெல்லாம் விவரித்துவிட்டு தனக்கு எந்தக் குறையுமில்லை. ஆனால், “நம் வீட்டில் இருந்த ஆழ்ந்த அமைதி மட்டும் ஏனோ இங்கில்லை’’ என்று எழுதி இருந்தாள். அவள் குடும்பம் ஆழ்ந்த அன்பும், பண்பும் இயல்பாக நிறைந்துள்ள இடம். பல தலைமுறைகளாக முறையாக வாழ்ந்த குடும்பம் என்பதால் அன்பையும், பண்பையும் சிறப்பானதாகக் கருதாமல், இயல்பான ஒன்றாகக் கருதிய இடம். அக்குடும்பத்தினர் ஆழ்ந்த நிம்மதியைத் தாங்கள் அனுபவிப்பதை உணராமலேயே என்றென்றும் பெற்றிருந்தனர். அன்பு **(affection)** என்பது தெய்வீக இயல்பு. பாசம், பற்று என்பது மனித குணம். அன்புக்குரியது ஆன்மா எனப்படும் சைத்திய புருஷனேயாகும். சைத்திய புருஷனுக்கு அன்பு எப்படி இயல்பானதோ, அதேபோல் சாந்தமும் இயல்பானது. அன்பு நிறைந்த குடும்பம் அமைதி தவழும் இடமாகும்.

இந்தப் பெண் புகுந்த வீடு எல்லா வகைகளிலும் இவளுக்குப் பொருத்தமானதென்றாலும், உயர்ந்த குடும்பங்களுக்குரிய



சிறந்த இலட்சணமான அன்பைப் பரம்பரையாகப் பெற்றதன்று. அவளுடைய அகவுணர்வு அதை அவளுக்குத் தெளிவாக உணர்த்திவிட்டது. “என் வீட்டில் சண்டை, சச்சரவு என்று நான் பார்த்ததேயில்லை’’ என்று ஒருவர் தம் 30-வது வயதில் சொன்னால், அவருடைய குடும்பம் அன்பான ஒன்று என்று அர்த்தம். நிம்மதியை நிலையாக வாழ்வில் அனைவரும் பெற வேண்டுமானால், குடும்பம் அன்புக்கும், பண்புக்கும் உறைவிடமாக இருக்க வேண்டும். இது வாழ்வின் நியதி. இதை எட்டியவர்கள் உண்டு. நிலையான மனநிம்மதியை நிறைவாக அனைவரும் அன்னை வழிபாட்டின் பலனாகப் பெறுவதெப்படி என்று நாம் கருதும்பொழுது சிறப்பான சிலருக்கு மட்டும் பொருந்தும் உயர்ந்த நிலைகளை மட்டும் முறையாக வற்புறுத்த இயலாது. அனைவராலும் முடியக்கூடிய முறைகளையே நாம் குறிப்பிட வேண்டும்.

‘ஒரு நாள் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், சலூனுக்குப் போய் தலைமுடியை அலங்காரம் செய்துகொள். ஒரு வாரம் சந்தோஷம் வேண்டுமானால் குதிரை வாங்கு. ஒரு மாத சந்தோஷத்திற்குக் கல்யாணமும், ஒரு வருஷ சந்தோஷத்திற்குப் புதிய வீடு கட்டுவதும், நிரந்தரமான சந்தோஷத்திற்கு நேர்மையைக் கடைப்பிடித்தலும் தேவை’ என ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. நேர்மை நிலையான சந்தோஷத்தையும், அதன் அடுத்த பலனாக மனநிம்மதியையும் தவறாமல் கொடுக்கும் என்பது நெடுநாள் வாழ்ந்தவர்களுடைய அனுபவம். அதுவே இங்கிலாந்தில் பழமொழியாக வழங்குகிறது. இதில் உள்ள உண்மையை எவரும் ஏற்றுக் கொள்வார்கள். இதை மேலும் ஆழ்ந்து கருதவேண்டி, மனநிம்மதியின் தலையாய எதிரி யார் என்று ஆராய்ச்சி செய்தால், அது கவலை என்று தெரியும். கவலையை முக்கியமாக உற்பத்தி செய்யும் புற நிகழ்ச்சிகளைத் தற்சமயத்திற்குக் கருதாது, அதன் உற்பத்தி ஸ்தானம் அகவுணர்வில் எது என்று கவனித்தால், அது சந்தேகம் என்று தெரியும். எந்தக் கவலையையும் அலசிப்பார்த்தால், அதனடியில் ஒரு சந்தேகம் புதைந்திருப்பது உண்டு. மனநிம்மதியை அழிக்கும் கவலையை உற்பத்தி செய்யும் சந்தேகத்தை அதன் வேரிலேயே அழிக்கக்கூடியது ஒன்றுண்டு;

அது நம்பிக்கை. நம்பிக்கையை முழுவதும் ஏற்படுத்துவது பெரிய வேலை என்பதால் அதை ஒதுக்கி, நமக்குள்ள சந்தேகத்திற்கு எதிரான நம்பிக்கையை ஏற்படுத்தலாம் என்று முயன்றால், அது எல்லோராலும் முடியக்கூடியதாகும். எளிமையான மனிதனும் தன்னால் முடியாது என்று சொல்ல முடியாத ஒரு முறையாகும். அதுவும் தெய்வ நம்பிக்கையாக அது இருந்தால் பலன் சிறப்பானதாக இருக்கும். வாழ்க்கையில் வீடு, பாக்டரி, ஆபீஸ், பொதுவாழ்வு ஆகிய இடங்களில் உள்ள நிம்மதியைக் குலைக்கும் நிகழ்ச்சிகளை எடுத்து, அங்கு எப்படி நிம்மதியை ஏற்படுத்தலாம், அதன் அடிப்படையான சந்தேகத்தை அகற்றலாம், அதன் எதிரியான நம்பிக்கையை உற்பத்தி செய்யலாம் எனக் கருதும் முயற்சியே இது.

அன்னையின் அருளுக்கு மனிதனுடைய பிரச்சனை சிறியது. கவலையை ஒழித்து, நம்பிக்கையை ஏற்படுத்த பல பெரிய வழிகள் உண்டு. மனிதன் எளிமையானவன். பிரச்சனைகள் அவனுக்குப் பயங்கரமாக இருக்கலாம். அவற்றைத் தீர்ப்பது அவ்வளவு சிரமம் இல்லை. ஒரு வகையில் மனிதன் எளிமையானவனானாலும், மற்றொரு வகையில் மனிதன் எதிலும் பிடிபடாதவன். ஒருவரைத் திருப்தி செய்ய முயன்றால், அது எவ்வளவு சிரமம் என்றுத் தெரியும். எவ்வளவு வந்தாலும், எது வந்தாலும் திருப்திபடாத மனம் உண்டு. மேலும் எதிர்பார்ப்பவர்களுண்டு. மனிதன் திருப்திபட வேண்டுமானால், அளவுகடந்து அவன் பெற வேண்டும். 9,000 ரூபாயைக் காணிக்கையாகச் செலுத்தி ஒருவர், “ஆசிரமம் வந்தபின் வாழ்க்கை நல்லவிதமாக இருக்கிறது’’ என்றார். அவர் சொல்லியதன் பொருளை அவருடைய நண்பர் பின்னொரு சமயம் விளக்கினார். “ஒரு சைக்கிள் வைத்துக்கொண்டு கடை, கடையாகப் போய்க்கொண்டிருந்தார். இங்கு வந்தார். சில வருஷங்களில் 20 இலட்சம் சம்பாதித்துவிட்டார்’’ என்று அவருடைய நண்பர் சொன்னார். மனிதன் திருப்திபட வேண்டுமானால் அளவுகடந்து, அபரிமிதமாக அவனுக்குச் செல்வமும், வளமும் பெருக வேண்டும். 500 ரூபாயை மொத்தமாக ஒரு மாதத்தில் பார்க்காத குடும்பத்துப் பிரச்சனைகள் அனைத்தும் மாதம் ரூ.1,000 வந்தால் மறைந்துவிடும்.



மனநிலை லேசாக ஒரு படியுயர்ந்தால், கவலை ஒழிந்து நம்பிக்கை பிறந்துவிடும்; மனநிம்மதி ஏற்பட்டுவிடும். அன்னை அதை அபரிமிதமாக முதலிலேயே கொடுப்பார்.

அன்னைக்குப் பிரார்த்தனை செய்யும் நிலைமையில் மாற்றம் செய்யக்கூடியது ஏதாவது உண்டா? மனதை மாற்றிக்கொள்ள இடம் உண்டா? மனப்பாங்கை மாற்றிப் பலனடைய வழியுண்டா? என்று சிந்தித்து, அங்கெல்லாம் நம்மால் முடிந்தவற்றைச் செய்தால், அதற்குள் கெட்டுப்போன மனநிம்மதி மனதில் மலர ஆரம்பிக்கும். அதன்பின் அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனை முழுவதுமாகப் பலிக்கும். இன்றைய கவலை நாளைய நிம்மதியாகும். மாற்றம் வரும்பொழுது முதலில் கவலை ஒழிந்தது என்றாகும். அடுத்த நிலையில் நிம்மதி ஏற்பட்டது என்று தெரியும். மூன்றாம் கட்டத்தில் சந்தோஷம் பிறக்கும். வேறு வகையாகப் பார்த்தால், நாம் எது செய்தாலும், செய்யா விட்டாலும் அன்னையை ஏற்றுக்கொண்டபின் அதே மூன்று நிலைகளும் ஆண்டுக்கு ஒன்றாகத் தானாக வருவதையும் காணலாம். வேறு கோணத்தில் பார்த்தால், நான் மட்டும் அன்னையை ஏற்றுக் கொண்டபொழுது முதல் கட்டமும், கணவனும் ஏற்றுக்கொண்டபின் இரண்டாம் நிலையும், குடும்பத்தார் அனைவரும் ஏற்றுக்கொண்ட நிலையில் மூன்றாவது பலனும் கிடைப்பதைப் பார்க்கலாம். செயலை முதல் நிலையாகவும், உணர்வை இரண்டாம் நிலையாகவும், அறிவை மூன்றாம் நிலையாகவும் கருதினாலும், மேற்சொன்ன மூன்று கட்டங்களும் - கவலை ஒழிந்தது, நிம்மதி ஏற்பட்டது, சந்தோஷம் உற்பத்தியாயிற்று என்ற மூன்று கட்டங்களும் படிப்படியாகத் தெரியும். நமக்குப் புரியாவிட்டாலும் நல்ல முறை என்று ஒருவர் சொல்வதை மனம் அறிந்துகொள்ளாவிட்டாலும், செயலால் செய்தால் முதல் நிலை பலனுண்டு. உணர்வு அம்முறையை ஏற்றுக்கொண்டு செய்தால் இரண்டாம் நிலை பலனுண்டு. அறிவும் அம்முறையைப் புரிந்து, மனமார ஏற்றுக்கொண்டபின், அம்முறையை மனமார, உளமார செயல்படுத்த முடியும். அந்நிலையில் கடைசி கட்டப் பலனாக சந்தோஷம் பிறக்கும். கவலையால் பீடிக்கப்பட்ட மனிதனுக்கு எந்தப் பலன் வந்தாலும் போதும்; கவலை அழிந்து

நிம்மதி எந்த வழியில் வந்தாலும் போதும். அதற்குரிய முறைகளும், முயற்சியும் எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடியவை; செயல்படுத்தக்கூடியவை.

நம் மீது அநியாயமான பழியைச் சுமத்தியவுடன் மனம் பதறுகிறது; துடிக்கின்றது; கொந்தளிக்கின்றது. நாடி ஜோஸ்யம் பார்த்தவுடன் போன ஜென்மத்தில் நாம் செய்ததன் பலன் அது என்று தெரிந்தவுடன் பதைப்பும், துடிப்பும் அடங்கி, மனம் அதை ஏற்றுக்கொள்கிறது. ஜோஸ்யத்தைப் பார்ப்பவன் கர்மத்தை ஏற்றுக் கொள்கிறான். அனுபவசாலி நாட்டிலுள்ள யதார்த்தத்தை ஏற்றுக் கொள்கிறான். படித்தவன் சட்டத்தைப் புரிந்துகொண்டு, அதை ஏற்றுக் கொள்கிறான். நமக்கு வந்த கஷ்டத்தைக் கண்டு பதறும் மனம், அதன் காரணத்தைக் கர்மமாகவோ, நடைமுறையாகவோ, சட்டமாகவோ உணரும்பொழுது பதட்டத்தை விட்டுப் பக்குவப்படுகிறது. அன்னை பக்தர்களுக்கும் அதே நியதியுண்டு. ஆனால் ஒரு மாற்றம், வாழ்க்கையில் தன் காரியத்தைத் தோற்று, அதற்குரிய காரணத்தைப் புரிந்து, இங்கு மனம் அடங்குகிறது. அன்னை பக்தர்களுக்கும் மனம் அடங்கும். ஆனால் அந்த நிலை மூலமாக மனநிம்மதி ஏற்படும். தோல்வியை ஏற்றுக்கொள்வது வாழ்க்கை அளிக்கும் விவேகம். வெற்றியை மட்டும் உறுதிப்படுத்துவதே அன்னை வழி. நம் காரியங்கள் கெட்டுப்போய் மனநிம்மதி அழிந்த நிலையில் அன்னையை நினைத்து, அவர் முறைகளைப் பரிசீலனை செய்தால், அவர் முறைகளைக் கடைப்பிடிக்கும்முன் நாம் சரி செய்யக்கூடியவற்றைச் சரி செய்தால், அந்தக் காரியம் எப்படிக் கூடிவரும் என்று நமக்குப் புரியும். கூடிவர ஆரம்பிக்கும். அதன் மூலம் நிம்மதி ஏற்படும். வெற்றி மட்டுமே உண்டு என்ற உண்மை அன்னை வாழ்வில் யதார்த்தமாகப் புரியும். அதன் மூலம் ஏற்படும் நிம்மதி, மேலும் நிலையான சந்தோஷத்தை உற்பத்தி செய்யும். வாழ்க்கையில் அனுபவசாலிக்கும், விவேகிக்கும், அறிவாளிக்கும் ஏற்படும் நிம்மதி தோல்வியை ஏற்கும் பக்குவத்தை அளிக்கிறது. அன்னை வாழ்வில் சாதாரண அன்பர்களுக்கு ஏற்படும் நிம்மதி வெற்றியை உறுதிபடுத்தி, மேலும் சந்தோஷத்தை உற்பத்தி செய்கிறது. மனித வாழ்வுக்கும், அன்னை நமக்களிக்கும் வாழ்வுக்கும் உள்ள முக்கியமான



வித்தியாசம் இது. தெளிவில்லாமல் அன்னையை ஏற்றுக்-கொண்ட நிலையிலும் கிடைக்கும் பலன் இது. இதைத் தெளிவோடு பெற்று, நிம்மதியை நிலைநிறுத்தி, சந்தோஷத்தை நிரந்தரமாக்க அன்பர்களால் முடியும் என்பதைப் பல கோணத்தில் இருந்தும் விளக்கவே நான் முயல்கிறேன்.

கவலையும், பயமும் நிம்மதியின் எதிரிகள். போதுமான படிப்பு இல்லாதவனுக்கு நகர வாழ்க்கையின் அம்சங்கள் விவரம் புரியாததால் பயத்தை உண்டு பண்ணுவது வழக்கம். விவரம் தெரிந்தவுடன் பயமும், அதனால் ஏற்பட்ட கவலையும் போவதுண்டு. உடலைப் பற்றிய விவரங்கள் டாக்டருக்குத் தெரிவதுபோல் நமக்கும் தெரிய முடியாது. நமக்குப் பீதி உண்டு பண்ணக்கூடிய வியாதிகளை டாக்டர் விவரம் தெரிவதால் எளிமையாகக் கருதுகிறார். அவருடைய விளக்கம் நமக்குத் தெரிந்தவுடன் அறியாமையால் ஏற்பட்ட பயம் விலகி, மனம் நிதானமடைகிறது. சொத்து, சட்ட விஷயங்களிலும் அனுபவம் இல்லாதவர்களுக்கு ஏற்படும் கலக்கம் வக்கீலைக் கலந்தவுடன் போய்விடும். அதேபோல் வயது முதிர்ந்தவர்களில் சிலர் விவேகியாக இருப்பார்கள்; அனுபவத்தால் வாழ்க்கையின் சூட்சுமங்களை அறிந்திருப்பார்கள். நிலைகலங்கிய மனிதர்-களுக்கு நிதானமாக அறிவுரை சொல்லி, நிமிஷத்தில் அழுகையைச் சிரிப்பாக மாற்றும் பழக்கம் அவர்களுக்குண்டு.

குரு ஸ்தானத்தில் உள்ளவர்கள், அனுபவசாலிகள், பழுத்த பழமாக வாழ்வின் கடைசி கட்டத்திலிருப்பவர்கள், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மலைபோல வரும் கஷ்டங்களைத் தங்கள் அனுபவ முதிர்ச்சியால் பனி போல விலக்குவதுண்டு. அன்னாருடைய அறிவுரையை ஏற்றுக்கொண்டு, அதன் பலனையடைய ஒரு பெரு முயற்சி தேவைப்படும். முயற்சி என்பது தெய்வீகம். பெரிய அறிவுரையைச் செயல்படுத்த ஏற்கும் முயற்சி அதனினும் சிறப்பானது. அன்னை முயற்சியைப் பெரிதும் பாராட்டுபவர். தெய்வீக முயற்சியைத் தவம் எனக் கருதுபவர். மனித வாழ்வில் ஏற்படும் தெய்வீக முயற்சிக்கு அபரிமிதமாக பலனை அளிப்பது அன்னையின் வழக்கம். நம் மனநிம்மதியைக் குலைத்த பிரச்சனையைத் தீர்க்க இது போன்ற முயற்சியை மேற்கொண்டு, பின்னர் அன்னைக்குப் பிரார்த்தனை

செய்தால் நிம்மதி வரும்; பிரச்சனை தீரும். மேலும் ஒரு கட்டம். அனுபவசாலிகளாலும், விவேகிகளாலும், குருவாலும் அறிவுரை சொல்ல முடியாத கட்டங்கள் உண்டு. இதற்கெல்லாம் தீர்வு கிடையாது, அனுபவித்தே தீர வேண்டும் என்று அவர்கள் சொல்லும் பிரச்சனைகள் பல உள. அதுபோன்று எல்லா பிரச்சனைகளுக்கும் அன்னை தீர்வு காணும் முறையை வகுத்துள்ளார். அம்முறைகளைத் தெளிவாகப் பின்பற்றினால் முழுவதுமாகக் கவலையும், பயமும் நீங்கி, நிம்மதி ஏற்படுவதுடன் பிரச்சனையும் கரைந்துவிடும்.

ஆன்மா தன் கவலைகளை மறந்தபொழுது, அவை கரைந்து விடுவதைப் பார்த்து திகைப்பதைக் கண்டு இறைவன் சிரிக்கின்-றான் என்று ஸ்ரீ அரவிந்தர் சொல்லுகிறார். ஸ்ரீ அரவிந்தர் மனிதனை இப்படிச் சொல்லியிருந்தால் சரி; ஆன்மாவையே அப்படி வர்ணிக்கின்றார். பூவுலகத்தில் பிறப்பெடுத்தபின் ஆன்மாவுக்கும் மனித குணம் ஏற்படுகின்றதுபோலும். இதனுள் புதைந்துள்ள கருத்தே நமக்கு இங்கு முக்கியமானது. ஒரு பிரச்சனையைப் பற்றி நாம் கவலைப்படும்வரை அப்பிரச்சனைக்கு வலுவிருக்கும். நாம் அப்பிரச்சனையை மறந்துவிட்டால், அப்பிரச்சனை கரைந்துபோகும் என்பதே இதன் கருத்து. சாதாரணமாக மனிதன் இக்கருத்தை ஏற்றுக்கொள்வது கடினம்; செயல்படுத்துவது அதிகக் கடினம். இக்கருத்தில் பொதிந்துள்ள உண்மையைச் செயல்படுத்துவதே நான் இதுவரை அன்னைமுறை என்று வர்ணித்தது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை உச்சக்கட்ட உதாரணமாகவும், அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சியை அனைவருக்கும் பொருந்தும் எளிய உதாரணமாகவும் எழுதினால், அதற்கிடைப்பட்ட அத்தனை நிலைகளும் இம்முறைக்குக் கட்டுப்படும் என்றாகும்.

(தொடரும்)

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சமர்ப்பணமே சமர்ப்பணமாவது சரணாகதி.



## நெஞ்சுக்குரிய நினைவுகள்

கர்மயோகி

### Synthesis of Yoga
### Part IV Chapter 1, Principle of Integral Yoga (P. 586)

[ஹட யோகம் உடலை மையமாக வைத்துச் செய்வது. ராஜ யோகம் மனத்தை மையமாகக் கொண்டது. தந்திர யோகம் எல்லா யோகங்களையும் இணைக்க முயல்வது. தந்திரம் மனிதனை ஆத்மாவாகக் கருதுகிறது, உடலின் ஆத்மாவாகக் கருதுகிறது. எனவே உடலுக்கும் உயிருக்கும் உரிய ஆசனம், பிராணாயாமம் அதன் கருவிகள். பூரண யோகம் ஆன்மிகமானது. எனவே அதன் முறைகள் ஆன்மாவுக்கும் மனத்திற்கும் உரியவையாக மட்டுமிருக்க வேண்டும். உடலில் ஆரம்பித்தால் முயற்சி பெரு முயற்சியாக இருக்கும். மனத்தில் ஆரம்பிப்பதால் பெரு முயற்சி தரும் பெரும் பலனை மனத்தின் திறனால் எளிதில் சீக்கிரம் அடைய முடியும். குண்டலினி மலர்ந்து எல்லா சக்கரம் வழியாக சகஸ்ரதளம் சென்று மோட்சம் பெறுவது மரபு. பூரண யோகத்தில் சகஸ்ரதளம் திறந்து மேலிருந்து சக்தி உடலில் வந்து, ஒவ்வொரு கட்டமாக குண்டலினியை வந்தடைந்து ஜீவனை சக்கரங்கள் மூலம் தூய்மைப்படுத்தும்.]

1. இதன் முறை சரணாகதி.
   - மனித ஜீவன் தெய்வீக ஜீவன், ஜீவியம், சக்தி, ஆனந்தத்திற்குச் சரணடையும்.
   - மனித ஆத்மாவில் எல்லா முனைகளிலும் தெய்வ ஜீவனை சந்திக்குமிடங்களில் ஐக்கியம் பூரண ஐக்கியம் பெறுகிறது.
   - இவ்வைக்கியத்தின் மூலம் இறைவனே நேரடியாக மனிதனாகிய கருவியை தன் ஜோதிக்கு உட்படுத்தி மனித ஜீவனை இயற்கையின் எல்லாச் சக்திகளிலும் தூய்மைப்படுத்துகிறான்.

2. இங்கு யோக இலட்சியத்தை நாம் விரிவு படுத்துகிறோம்

எல்லா யோகங்களிலும் ஆரம்ப கட்டம் மோட்சம்.

பொதுவாக இந்த ஆரம்ப இலட்சியத்தை முடிவான இலட்சியமாக்கிவிடுவது வழக்கம்.

அங்கு ஆனந்தம் என்பது நம் ஆத்மா ஆண்டவனில் கரைவது.

3. தந்திர யோகம் முக்தியை முடிவாகக் கருதினாலும், அது பூரணச் சிறப்பும் **(perfection)** அனுபவமும் இலட்சியமாகக் கொள்கிறது.

அத்துடன் உச்சகட்ட அனுபவத்தையும் ஒரு க்ஷணம் காணக் கூடியது தந்திர யோகம்.

உச்சகட்ட அனுபவம் என்பது முக்தியும், பிரபஞ்சத்தில் செயல்பட்டு அனுபவிப்பதுமாகும்.

*அதனால் எல்லா முரண்பாடுகளும் அந்நிலையில் மறையும்.*

4. இது யோக இலட்சியத்தை தந்திர யோகம் உயர்த்திய நிலை.

நாம் அங்கே ஆரம்பிக்கிறோம்.

அத்துடன் இன்னொன்றையும் நாம் சேர்ப்பதால் நம் இலட்சியம் பூரண முக்கியத்துவம் பெறும்.

5. மனிதனை நாம் தனிமனிதனாகக் கருதாமல் பிரபஞ்ச ஜீவனாகக் கருதுகிறோம்.

இப்பிரபஞ்ச ஜீவன் எல்லா ஜீவாத்மாக்களுடன் இணையக் கூடியது எனவும், இயற்கையில் எல்லா அம்சங்களுடனும் இணையக் கூடியது எனவும் கொள்கிறோம்.

*இந்த ஆன்மிக இலட்சியத்தின் நடைமுறை முடிவுகளை நாம் ஏற்க முன்வருகிறோம்.*

(அதாவது எவர் சிரமமும் நம் சிரமமாகும், எந்த ஜீவராசியின் துன்பமும் நம் துன்பமாகும்.)



6. யோகத்தின் முதல் இலட்சியம் மோட்சம், இறைவனுடன் இணைவது.

அதைச் சுதந்திரமாக பிரபஞ்சத்தில் அனுபவிப்பது அடுத்த இலட்சியம்.

(பிறருடைய வலி நம் வலியாவதைப் போல் பிறருடைய ஆனந்தம், பிற பொருள்களின் ஆனந்தம் நம் ஆனந்த-மானால் *நாம் பிரபஞ்ச ஆனந்தம் முழுவதும் அனுபவிப்போம்.*)

7. இதிலிருந்து அடுத்த இலட்சியம் எழுகிறது. அது, இறைவனுடன் இணைவது என்பது எல்லா ஜீவன்களுடனும், ஜீவராசிகளுடனும் இறைவனின் திருவுள்ளப்படி நாம் அனுதாபத்தால் பங்கு கொள்வோம்.

(மற்ற ஜீவாத்மாக்கள் பெறும் முக்தி, ஆனந்தம் அவர்கள் மூலம் முழுமையாக நமக்கும் வரும்.)

8. *தனிமனிதனுடைய யோகம் பிரபஞ்ச யோகமாகிறது.*

(அனைத்து ஜீவாத்மாக்களுடன் ஆத்மாவில் தொடர்பு கொள்வதால் நாம் மட்டும் யோகம் செய்யவில்லை. நம்முள் எல்லா ஜீவாத்மாக்களும் யோகம் செய்கின்றனர்.)

முக்தியடைந்த ஜீவாத்மா இறைவனுடன் பிரம்மத்திலும் ஆன்மாவிலும் இணைகிறான்.

அவன் தானே தன்னைச் சிறப்புறச் செய்யும் கருவியாக்கி அதன் மூலம் இறைவன் மனித குலத்தில் மலரும் சந்தர்ப்பம் எழுகிறது.

9. அம்மலர்ச்சிக்கு இரு அம்சங்கள் உண்டு.

- அகந்தையினின்று வெளிவருதல் ஒன்று.
- தெய்வீக சுபாவத்தை உயர்ந்த முறையில் பெறுவது இரண்டு.

10. அதாவது சிறப்பு மனத்தின் சுபாவத்தைச் சத்திய ஜீவிய ஆன்மிக சுபாவமாக மாற்ற வேண்டும்.

11. ஞானம், உணர்ச்சி, கர்மம் ஆகியவற்றின் பூரண யோகத்தை ஆன்மிக சத்திய ஜீவிய சுய சிறப்புள்ள யோகமாக மாற்ற வேண்டும்.

ஞானம், உணர்ச்சி, கர்ம பூரண யோகம் என்றால் இவை ஒவ்வொன்றும் முதிர்ச்சியால் இணைந்து பூரணம் பெறும். ஆன்மிக சத்திய ஜீவிய சுய சிறப்பான யோகமெனில் ஆன்மா ஞானத்தில் உள்ளது உணர்ச்சியிலும் உள்ளது, கர்மத்திலும் உண்டு. இந்த ஆன்மா சுய சிறப்புப் பெறுவதால் சத்திய ஜீவியமாகிறது. அதனால் இது பூரண யோகமாகிறது. *உலகில் அனைத்தும் ஆன்மா. எனவே ஞானமும் ஆன்மா. ஞானத்தின் ஆன்மா பரிணாமத்தால் சுயமாக சிறப்பு எய்துகிறது.* உணர்ச்சியும் ஆன்மா. இந்த ஆன்மா பரிணாமத்தால் முதலில் ஞானமாகி, முடிவில் ஆன்மாவாகவும், சத்திய ஜீவியமாகவும் மாறுகிறது. முதலில் சொல்லியது ஞானம் முதிர்ச்சியால் மாறுவது. இரண்டாவது கூறுவது பரிணாமத்தால் மாறுவது.

12. *இறைவன் மனிதனுள் வந்து சத்தியஜீவியமாக, முதலில் மனம் இறைவனோடு இணைந்து ஒருமை எய்த வேண்டும்.*

13. இக்காரணத்தால் திரிமார்க்கமான ஞான, கர்ம, பக்தி யோகங்கள் பூரணயோகத்தின் முக்கிய இரகஸ்யமாகிறது.

14. இறைவனோடு கலந்து ஐக்கியமாகிக் கரைவது (மோட்சம் பெறுவது) இந்த யோக இலட்சியமில்லை. ஏனெனில் இந்த இலட்சியத்தை ஏதாவது ஒரு - மனம், உணர்ச்சி, செயலில் ஒன்று - சரணம் பெற்றுத் தரும். ஆனால் சத்திய ஜீவன் இறைவனின் முழு ஜீவனையும் சுபாவத்தையும் அனுபவிப்பது நம் நோக்கம். (பிரதமருடன் நட்பு வேண்டுபவன் உறவு, நட்பு, அரசியல் மூலம் அதைப் பெற முடியும். பிரதமருடைய காபினட்டில் மந்திரியாகி அரசியல் அதிகாரம் பெறுவது அவருடனும், அவருடைய அதிகாரத்துடனும் முழுவதும் இணைவதாகும். மோட்சம்



பிரதமரை அறிவது. பூரண யோகம் அவர் மந்திரி சபையில் அங்கம் வகிப்பது, பிரதமராவது.)

15. மேலும் ஞான மார்க்கம் முழுமை பெற்றால், முதிர்ச்சியால் பூரணம் பெற்றால், அதுவே பக்திமார்க்கமாகவும், கர்மமார்க்கமாகவுமாகும். *எந்த ஒரு மார்க்கம் பூரணம் பெற்றாலும் அடுத்த இரு மார்க்கங்களும் அதனுள் காணப்படும்.* (நிலம், வியாபாரம், தொழில் (**industry**), அரசியல் எந்த ஒரு துறையிலும் ஒருவர் உச்சக்கட்டம் எய்தினால், மற்ற துறைகளால் பெறும் பெரிய வசதி, அந்தஸ்து, அதிகாரம், பிரபலம் பெறலாம் என்பதை உதாரணமாகக் கூறலாம்.)

16. அதனால் எந்த ஒரு மார்க்கத்திலும் ஆரம்பித்து முடிவில் முழுமை பெறலாம். என்றாலும் மூன்று முறைகளிலும் ஒரே சமயத்தில் ஆரம்பிப்பது சிரமமானாலும், அவசியமில்லை எனினும் பகவான் விரும்பும் முறை அதுவே.

(தொடரும்)

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகில் இதுவரை நடந்த யோகங்கள் எல்லாம் மேல் மன யோகம். அகந்தை செய்த தவம். ஆயிரம் ஆண்டிற்கு முன் நம் ஊரில் உலகம் என்பதை நம் ஊர் எனக் கொண்டோம். ராக்கெட் வந்த பின் அதுவரை ரயில், கார், விமானம் உள்பட உலகில் செயல்பட்டவை. ராக்கெட் பூமியைக் கடந்து செயல்படுகிறது. அது போல் பூரண யோகம் முதல் முறையாக மேல் மனத்தைக் கடந்து செல்கிறது. மேல் மனத்தில் மனமாக செயல்படுவது நினைவு. நினைவு மனத்தின் பகுதி. அஞ்ஞானம் மேல் மனத்தில் சுய அனுபவம் பெற முயல்வதால் அகந்தை உருவாகிறது. **முழு உண்மையை அறிய மேல் மனத்தால் முடியாது.**

**மேல் மனத்திலும், உள் மனத்திலும் ஆத்மாவையும், இயற்கையையும் அறிய முயன்றால் சத்தியம் புலப்படும்.**

## அன்பர் அனுபவம்

இரயில்வே ஸ்டேஷனை ஒட்டி இரயில் பாதையின் ஓரங்களில் உள்ள வீட்டில் வசிக்கும் பெண் ஒருவர். 12-ஆம் வகுப்பு முடித்தவள். தனது சித்தியின் பராமரிப்பில் வளர்வதால், பெற்றோர் சொற்படி படிப்பை அத்துடன் நிறுத்தி, இரயில்வே பீடர் ரோடில் உள்ள கடைகளுக்கு வாசல் தெளித்து, சுத்தம் செய்து, கோலம் போட்டு, குடிநீர் எடுத்து வந்து வைப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்தாள்.

வேலைகளைத் திருத்தமாகவும் நன்றாகவும் செய்பவள். அப்படி வேலை செய்யும் கடைகளில் நகைக்கடையும் ஒன்று. அங்கு ஸ்ரீ அன்னை மற்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தரின் திருவுருவப் படங்களைப் பார்த்தவள் அந்தக் கடைக்காரரிடம், இவர்கள் யார்? நிறைய இடங்களில் இப்படங்களைப் பார்த்திருக்கின்றேன் எனக் கேட்டாள்.

அக்கடைக்காரர் அன்னையைப் பற்றியும் பகவானைப் பற்றியும் தனக்குத் தெரிந்தவற்றைக் கூறினார். சுவாமி விவேகானந்தர் பகவானுக்கு யோகத்தில் வழிகாட்டியதையும், பகவானது யோகச் சிறப்பையும் சொன்னார். மேலும் அவளுக்குப் புரியும் வண்ணம், இவர்களிடம் சொல்லிவிட்டுச் செயல்பட்டால் அனைத்தும் நல்லதாக நடக்கும் என்றார். எனக்கென்ன வேண்டும்? மேலே படிக்க வேண்டும், அதுதான் எனக்கு வேண்டியது என்றாள் இவள். இவர்களிடம் சொல் நிச்சயம் நடக்கும் என்று நம்பிக்கை ஊட்டினார் நகைக்கடைக்காரர்.

தினமும் வேலையை முடித்து ரயில் நிலையம் வழியாக வீட்டிற்கு வருவாள். அப்படி வரும் பொழுது ரயில் நிலையத்தின் சுவரில் இருந்த அறிவிப்பைக் கண்டாள். அது சுவாமி விவேகானந்தர் அந்த ரயில் நிலையத்திற்கு வந்து சென்றதை நினைவுகூறும் ஒரு அறிவிப்பு. கையில் கிடைக்கும் மலரை சுவாமி விவேகானந்தரின் ஓவியம் வரையப்பட்டிருந்த அந்த அறிவிப்பின் கீழ் வைத்து கண் மூடி வேண்டிவிட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டாள்.



இதைத் தினமும் பார்த்துவந்த ரயில் நிலையப் பெண் போலீஸ் ஒருவரும் இப்பெண்ணுக்குப் பழக்கமானார்.

ஆக இவளுடைய அன்றாட வேலைகளை முடித்தபின்னர் நகைக் கடைக்காரரிடமும் இந்த பெண் போலீஸிடமும் தினமும் சற்றுப் பேசிவிட்டு வீடு திரும்புவாள்.

ஒரு நாள் நகைக் கடைக்காரர், புதியதாக பழைய பேப்பர்களை வாங்கும் கடை வந்துள்ளது. அக்கடைக்காரரும் வேலைக்கு ஆள் வேண்டும் என்றார், நீ வந்ததும் அனுப்புகிறேன் என்றேன். உனக்கும் பணம் தேவைதானே, அந்த வேலையை ஏற்றுக்கொள் என்றார். அவளும் சம்மதித்து உடனே அப்புதிய கடைக்குச் சென்றாள். 'மற்ற கடைகளுக்கு செய்வது போல் வாசல் சுத்தம் செய்வது, குடிநீர் கொண்டுவருவது ஆகியவற்றை செய்ய வேண்டும், நாளையிலிருந்து செய்கிறாயா' என்று கடைக்காரர் கேட்க, 'இன்றிலிருந்தே செய்கிறேன்' என்று வேலையை ஆரம்பித்து முடித்தாள்.

பின் அங்கு இருந்த புத்தகக் குவியலில் ஸ்ரீ அரவிந்தரின் ஓவியத்தை அட்டைப்படமாகக் கொண்ட ஒரு புத்தகத்தைக் கண்டாள். கடைக்காரரிடம் கேட்கத் தயங்கியபடியே நிற்க, கடைக்காரர் 'என்னம்மா வேண்டும். ஏதாவது பணம் அட்வான்ஸாக வேண்டுமா' எனக் கேட்டார்.

'பணமெல்லாம் வேண்டாம் அண்ணே, எனக்கு இந்த புத்தகம் மட்டும் கிடைக்குமா' எனக் கேட்டாள். 'இவ்வளவுதானா! இதென்ன பிரமாதம், எடுத்துக்கொள்' என்றார்.

அது ஸ்ரீ அரவிந்தரின் 127-ஆவது பிறந்த நாளையொட்டி 'ஞான ஆலயம்' என்ற ஆன்மிக மாத இதழுடன் சிறப்பிணைப்பாக வெளியிடப்பட்ட 'ஸ்ரீ அரவிந்தம்' எனும் புத்தகம். அப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு இரயில் நிலையம் வந்தாள். கையில் புத்தகத்துடன் வருபவளைக் கண்ட பெண் போலீஸ், கையில் என்ன புத்தகம் எனக் கேட்டார். விபரம் அறிந்த பின், இவர்களைப் பற்றிய புத்தகத்தைத்தான் உனக்கு கொடுக்க வேண்டும் என்றிருந்தேன். அவர்களே உன்னிடம் வந்து விட்டார்கள் எனச் சொல்லி மகிழ்ந்தார்.

புத்தகத்தை ஆர்வமாய்ப் படித்தாள். ஒரு நாள் வழக்கம் போல் அதிகாலை வாசல் தெளித்து கோலம் போடச் சென்ற போது, ஒரு கைப் பை ரோடிலிருப்பதைக் கண்டாள். அதை எடுத்து பத்திரப்படுத்திவிட்டு, வேலைகளை முடித்துவிட்டு, நகைக்-கடைக்காரரிடம் விபரம் சொல்லி அந்த கைப் பையைக் கொடுத்தாள்.

திறந்து பார்த்தால், பையில் நகை இருந்தது. விலாசம் ஏதாவது இருக்கிறதா எனப் பார்த்து கொடுத்துவிடுங்கள் எனக் கூறினாள். 'விலாசம் ஏதும் இல்லை. நீயே வைத்துக்கொள். யாராவது வந்து கேட்டால் சொல்லி அனுப்புகிறேன். அன்னை உனக்கு படிப்புச் செலவிற்காகக் கொடுத்திருக்கிறார் போலிருக்கிறது' எனச் சொல்லி அனுப்பிவிட்டார்.

கையில் பையோடு வழக்கம் போல இரயில் நிலையப் பெண் காவல் அதிகாரியிடம் பேச வந்தவள், 'அக்கா இந்தப் பை வழியில் கிடைத்தது. உரியவரிடம் சேர்ப்பிக்க வேண்டும்' எனக் கேட்டாள்.

பையை ஆராய்ந்த அதிகாரி, செல் போன் நம்பர் ஒன்று இருப்பதைக் கவனித்து, போன் செய்து பார்த்தார். எதிர்முனையில் எடுத்தவரிடம் விபரம் சொல்ல, தனது பெண் திருமணத்திற்காக எடுத்த நகை, அது தொலைந்து போனதால் அபசகுனமாகி நிலைமை மிகவும் சங்கடமாக உள்ளது எனக் கூறினார் போன் எடுத்தவர். பை விபரம், ரயிலில் வந்தது என அனைத்து விபரங்களையும் சரியாகக் கூறியதால், இரயில் நிலையம் வந்து வாங்கிச் செல்லுங்கள் என காவல் அதிகாரி சொன்னார்.

நகையைத் தொலைத்த பெண்மணி வந்து நகையைப் பெற்றுக் கொண்டு மிகுந்த நன்றிப்பெருக்கோடு தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் அந்தப் பெண் காவல் அதிகாரிடம் சொன்னார். அதற்கு அந்த காவல் அதிகாரி, நீங்கள் உண்மையில் நன்றி சொல்ல வேண்டியது இந்தப் பெண்ணிற்குத்தான். அவள்தான் இந்த பையைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து உரியவர்களிடம் சேர்க்கச் சொன்னாள் என்றார்.



அப்பெண்மணி, இந்தப் பெண்ணிடம் வந்து நன்றி கூறி பணம் எடுத்துக் கொடுக்க, பணம் எல்லாம் வேண்டாம் அம்மா என மறுத்துவிட்டாள்.

பின் இந்தப் பெண்ணின் விபரங்களைக் கேட்டு, உனது பெற்றோர்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல, அவளும் தன் வீட்டிற்கு அவர்களை அழைத்து வந்தாள்.

அப்பெண்மணி இந்தப் பெண்ணின் தந்தையிடம், இவளை நான் படிக்க வைக்கிறேன். என்னுடன் அனுப்பி வையுங்கள் எனக் கேட்டுக் கொண்டார். எங்களை இக்கட்டிலிருந்து காப்பாற்றிய உங்கள் பெண்ணிற்கு நாங்கள் செய்யும் கைமாறாகக் கொள்ள வேண்டும் எனக் கேட்டார். சில நாட்கள் கழித்து யோசித்து, பெற்றோர்களும் சம்மதித்து பெண்ணை அனுப்பி வைத்தனர்.

சமீபத்தில் காவல் நிலையப் பெண் அதிகாரி, அப்பெண் தற்பொழுது நர்ஸிங் காலேஜில் சேர்ந்து பயிலுவதாகச் சொன்னார். மேலும் அவர் கூறுகையில், என்னுடன் அப்பெண் பேசும்போது, 'படிக்க வேண்டும் படிக்க வேண்டும் என்று கூறுகிறாயே, என்ன படிக்க ஆசை' எனக் கேட்ட பொழுது, அவள் நர்ஸாக வேண்டும் எனக் கூறியதாகக் கூறினார். அன்னை அவளின் விருப்பப்படியே நர்ஸிங் கோர்ஸில் சேர்ந்து படிக்க அருள் புரிந்துள்ள கருணையை எண்ணி நெகிழ்ந்து இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அன்னை நம்மைத் தேடிவரத் தேவையான ஆர்வம், பரிபூரண உண்மை இந்தப் பெண்ணிடம் இருப்பதைக் காண முடிகிறது. மேலும் அன்னை இவளைத் தேடிவந்த வழிகள், - முதலில் நகைக்கடைக்காரர் வழியாக அறிமுகம், பின் பழைய பேப்பர் கடையில் கண்ட ஸ்ரீ அரவிந்த புத்தகம், அதுவும்போக, அன்னையின் புத்தகம் எதை இவளுக்குக் கொடுக்கலாம் என்ற நினைப்போடு பழகிய போலீஸ் அதிகாரி - நம்மைச் சுற்றியுள்ள சந்தர்ப்பங்கள் வழியாக அன்னை நம்மை நோக்கி வந்து, தம் கைகளால் நம்மை அரவணைத்து நம் ஆழ்மன ஆசையைப் பூர்த்தி செய்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

## அன்னை இலக்கியம்

## மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 14. சித்தப்பா

சூளைமேடு வீட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு ஆறு மணிக்கு விளக்கு வைக்கும் நேரத்தில் நானும் ஜமுனாவும் வீட்டை விட்டு வெளியேறினோம்.

மோட்டார் சைக்கிளில் சற்றுத் தயங்கி விட்டு ஏறும் போது ‘இந்த வண்டி யாருடையது?’ என்றாள் ஜமுனா.

“ஆடிட்டர் தினகரனுடையது. என்னோடு பள்ளியில் படித்தவன். ‘கல்யாண சமயத்தில் தேவைப்படும். சைக்கிளில் அலையாதே. ஒரு வாரம் வைத்திரு’ என்று சொல்லித் தந்தான். நான் வேண்டாம் என்று கூறியும் சாவியை என் கையில் திணித்துவிட்டுப் போய்விட்டான்” என்றேன்.

‘புது வண்டி போலிருக்கிறது’ என்றாள் ஜமுனா.

“உன்னை நான் பெண் பார்த்துவிட்டு வந்த மறுநாள் தினகரன் என்னைப் பார்க்க வந்தான். ‘இந்த வண்டி ஒன்றரை லட்சம் ஆகிறது. பேங்கில் கடன் தர ஜாமீன் கையெழுத்து கேட்கிறார்கள். என் வாடிக்கையாளர் எவரிடமும் உதவி கேட்க விருப்பமில்லை. நீ போடுகிறாயா?’ என்றான். பதிவு செய்த பின் போன வாரம் வண்டி வந்தது. என்னிடம் கொண்டு வந்து கொடுத்து, உன் கல்யாணம் முடிந்த பின் வாங்கிக் கொள்கிறேன் என்றான். புது வண்டி” என்றேன்.

‘இருந்தாலும் அடுத்தவர் வண்டிதானே?’ என்றாள் ஜமுனா.

பின்னால் உட்கார்ந்து கொண்டு ஒரு பெரிய பையை மடியில் வைத்துக் கொண்டாள். என் பொருட்கள் இருந்த சிறிய பையை வண்டியின் பக்கவாட்டில் தொங்கவிட்டுக் கொண்டேன்.



‘பாட்டியையும், சின்ன மாமாவையும் பார்த்து விட்டு போகலாமா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘வீடு எங்கே இருக்கிறது என்று தெரியும். வளர்ந்தபின் ஒரு தடவை கூட உள்ளே போனதில்லை’ என்றேன். பின் தயக்கத்துடன் ‘சித்தப்பா பற்றி கேள்விப்பட்டிருப்பாயே’ என்றேன்.

‘எவரைப் பற்றியும் நான் எந்த முடிவான கருத்தையும் வைத்துக் கொள்வதில்லை’ என்றாள் ஜமுனா.

சித்தப்பா வீட்டிற்குச் சென்ற போது கூடத்தில் ஒரே ஒரு மின்விளக்கு துயரத்துடன் தனிமையில் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. ஒரு சாய்வு நாற்காலியில் சித்தப்பா கண்களை மூடி சரிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

‘இவர்தான் சித்தப்பா’ என்று ஜமுனாவிடம் மெல்லிய குரலில் கூறினேன்.

அவரருகே சென்று தரையில் அமர்ந்த ஜமுனா ‘மாமா’ என்றழைத்தாள்.

கண்களை மெல்லத் திறந்த சித்தப்பா ‘யாரம்மா நீ?’ என்றார்.

‘உங்கள் புதிய மருமகள். கொஞ்சம் எழுந்து நில்லுங்கள்’ என்றாள் சற்று அதிகாரமாக.

திகைப்புடன் மெல்ல எழுந்து தள்ளாடியபடி நின்றார் சித்தப்பா.

எனக்கும் ஜாடை காட்டினாள் ஜமுனா. நானும் அவளும் சித்தப்பாவின் கால்களில் விழுந்தோம். ‘நன்றாக இருங்கள்’ என்றார். தன் சட்டைப்பையை தடவிப் பார்த்தார். அங்குமிங்கும் பார்த்து விட்டு ‘நன்றாக இரும்மா’ என்று கூறிவிட்டு மீண்டும் சாய்வு நாற்காலியில் சரிந்தார்.

‘எனக்கு அழைப்பு வந்தது. வரக்கூடிய நிலையில் நானில்லை. உங்கள் கல்யாணத்தைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உன் பெயர் ஜமுனாதானே?’ என்றார் சித்தப்பா.

‘ஆமாம்’

‘இவன் பெயர் என்ன? மறந்துவிட்டேன்’ என்றார் சித்தப்பா.

‘சொல்லுங்கள்’ என்றாள் ஜமுனா.

‘பரமார்த்தன்’ என்றேன்.

‘ஜமுனா, எனக்கு மரியாதை கொடுத்து என் காலில் விழுந்த முதல் ஆள் நீதான்’ என்றார் சித்தப்பா. அவர் கண்களில் நீர் திரண்டது. ‘என்னிடம் பணம் வாங்கியவர்கள் கூட என் காலில் விழுந்ததில்லை. நானோ பணத்தையும் கொடுத்துவிட்டு வைப்பாட்டிகளின் கால்களிலும் விழுகிறவன். என்னை எவன் மதிப்பான்?’ என்றார் சித்தப்பா.

‘பாட்டி எங்கே?’ என்று கேட்டேன்.

‘யாருக்குத் தெரியும்? காபி கூட தராமல் வெளியே போய்விட்டார்’ என்றார் சித்தப்பா எரிச்சலுடன்.

‘நான் போட்டுத் தருகிறேன் மாமா’ என்று எழுந்தாள் ஜமுனா.

‘எனக்கும்’ என்றேன்.

புன்னகைத்துவிட்டு உள்ளே சென்றாள் ஜமுனா.

நானும் சித்தப்பாவும் பேசாமல் சில நிமிடங்கள் வெவ்வேறு திசைகளில் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம்.

எங்களுக்கு ஜமுனா காபி கொண்டு வந்த போது ஆவலுடன் சித்தப்பா வாங்கிக் கொண்டார். ‘நான் கேட்காமல் எனக்கு கிடைத்த முதல் காபி இதுதான்’ என்றார்.

சித்தப்பா எங்கள் வரவால் குழம்பிப் போயிருந்தார். ‘என்னைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்குமே?’ என்று கேட்டார்.

‘நான் இன்றுதான் இந்தக் குடும்பத்திற்குள் வந்திருக்கிறேன்’ என்றாள் ஜமுனா.

‘எனக்குப் பெண்பித்தன் என்ற கெட்ட பெயருண்டு’ என்றார் சித்தப்பா.



‘அழகை ஆராதிப்பவரை வாய்ப்பு கிடைக்காத பொறாமைக்-காரர்கள் அப்படித்தான் கேலி பேசுவார்கள்’ என்று கூறிச் சிரித்தாள் ஜமுனா.

சற்று நிமிர்ந்து உட்கார்ந்த சித்தப்பா ‘எப்போதும் மயக்கத்தில் வேறு உலகத்தில் இருப்பவன்’ என்றார் சித்தப்பா.

‘சகஜ சமாதியில் இருக்கும் யோகியைப் போல’ என்றாள் ஜமுனா.

‘அப்படியா சொல்கிறாய்? நான் சூதாடத் தயங்காதவன்’ என்றார் சித்தப்பா.

‘முன்னோடிகள், தொழில் செய்பவர்கள் எல்லோரும் வாழ்க்கையோடு சூதாடிக் கொண்டுதானே இருக்கிறார்கள்? மாமா, தப்பு என்று எதை யார் சொல்வது? எந்தத் தப்பும் ஏதோ ஒரு பெரிய நல்லதிற்கு நம்மைக் கூட்டிச் செல்லும் வழிகாட்டி’ என்றாள் ஜமுனா.

சித்தாப்பாவின் முகத்தில் புன்னகை அரும்பியது. ‘கெட்டிக்காரிதான்’ என்று பாராட்டிவிட்டு ‘உனக்கு ஏதாவது தர வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. என்ன தருவது என்று தெரியவில்லை’ என்றார் சித்தப்பா.

‘மனதில் அன்பிருந்தால் போதும். உண்மையான நினைப்பு கொடுப்பதற்குச் சமானம். எண்ணம் என்பது செயல்தான். நல்ல எண்ணம் நல்ல செயல்’ என்றாள் ஜமுனா.

‘போயும், போயும் வீணாகிவிட்ட என்னை எதற்குப் பார்க்க நினைத்தாய்?’ என்றார் சித்தப்பா.

‘இவருடைய அப்பா எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. அப்படியானால் இவருக்கு இப்போது நீங்கள்தானே அப்பா?’ என்றாள் ஜமுனா.

‘ஆமாம். நான்தான் உனக்கு மாமனார்’ என்று தலையை ஆட்டி ஆமோதித்தார் சித்தப்பா.

‘உங்கள் ஆசிர்வாதம் இல்லையென்றால் நான் எப்படி நன்றாக வாழ முடியும்? அது மட்டுமில்லை மாமா. உலகம்

முன்னேறுகிறது என்றால் எல்லா நாடுகளும் முன்னேற வேண்டும். அமெரிக்கா மட்டும் முன்னேறிவிட்டு ஆப்பிரிக்கா முன்னேறவில்லை என்றால் அது எப்படி உலக முன்னேற்ற-மாகும்?' என்றாள் ஜமுனா.

'அதனால்?' என்று கேட்டார் சித்தப்பா.

'நீங்கள் ஒருவர் சந்தோஷமாக இல்லாவிட்டால் கூட நம் குடும்பம் சந்தோஷமாக இல்லை என்றுதானே அர்த்தம்? உங்களைச் சந்தோஷப்படுத்தத்தான் வந்தேன்' என்றாள் ஜமுனா.

'நான் வாழ்க்கையில் முதல் தடவையாக இன்றுதான் உண்மையாகவே சந்தோஷமாக இருக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள், இருந்தால் தருகிறேன்' என்றார் சித்தப்பா.

'நம் குடும்பத்தில் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். வேறென்ன கேட்கப் போகிறேன்?' என்றாள் ஜமுனா.

சிறிது நேரம் யோசித்த சித்தப்பா எழுந்து அறைக்குள் சென்று ஒரு பெரிய காகிதக் கட்டோடு திரும்பி வந்தார். 'இருபது வருஷமாக கேஸ் நடத்துகிறேன். இதனால் யாருக்கும் சந்தோஷமும் இல்லை. பிரயோசனமும் இல்லை' என்றார்.

சில வெற்றுக் காகிதங்களில் கையெழுத்து போட்டு, காகிதக் கட்டோடு ஜமுனாவிடம் கொடுத்தார். 'நீயே போய் வக்கீலிடம் கேஸை நிறுத்தச் சொல்லி விடு. இருபது வருஷமாக தொடர்ந்து வரும் வருமானம் நிற்குமென்றால் அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும்? அவர் எப்படியும் என்னைத் தேடி வருவார். நான் பேசிக் கொள்கிறேன்' என்றார் சித்தப்பா.

பாட்டிக்காகக் காத்திருந்தோம். வரவில்லை. மேலும் சற்று நேரம் சித்தப்பாவோடு ஜமுனா பேசிக் கொண்டிருந்தாள். அதன்பின் கிளம்பினோம்.

'அடிக்கடி வந்து காபி போட்டு தந்துவிட்டுப் போம்மா' என்றார் சித்தப்பா. வாசலுக்கு வந்து வழியனுப்பினார்.

புன்னகைத்தாள் ஜமுனா.



மோட்டார் சைக்கிளில் சூளைமேடு வீட்டை நோக்கி போகும் போது 'எத்தனையோ லட்சங்களை சித்தப்பா தொலைத்திருக்-கிறார். தாத்தா நேர்மையாக சம்பாதித்தது' என்றேன்.

'பாட்டி மீது தாத்தா வஞ்சம் வைத்திருக்காவிட்டால் அந்த நஷ்டம் கூட வந்திருக்காது. சந்தோஷமான மனநிலையில் கட்டியிருந்தால் பங்களாக்கள் பயன்பட்டிருக்கும். பாட்டியை பழி வாங்கத்தானே பெரிய பெரிய வீடுகளைத் தாத்தா கட்டினார்?' என்றாள் ஜமுனா.

'தாத்தாவைப் பற்றி உனக்கு தெரியாது' என்றேன்.

'நன்றாகத் தெரியும். எப்போது மதுரை வந்தாலும் வீட்டிற்கு வருவார். சுந்தரமும், நானும் எப்படிப் பேசிக் கொள்வோமோ, அதே போல நானும், தாத்தாவும் பேசிக் கொள்வோம்' என்றாள் ஜமுனா.

'சித்தப்பா இப்படி சட்டென மாறுவார் என்று நான் கற்பனை கூட செய்ததில்லை' என்றேன்.

'அவர் மாறவில்லை. எப்போதும் போலத்தான் இருக்கிறார். நாம்தான் அவரைப் பற்றி இப்போது வேறு வகையாக நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்' என்றாள் ஜமுனா.

மணி ஒன்பதாகிவிட்டிருந்தது.

'எங்கே சாப்பிடலாம்?' என்றேன்.

'எனக்கு பசியே இல்லை' என்றாள் ஜமுனா.

'எனக்கும்தான்' என்றேன்.

'போனதும் வீட்டை சுத்தம் செய்ய வேண்டும்' என்றாள் ஜமுனா.

'பங்களாவிற்குப் போகுமுன் எப்படி இருந்ததோ அதே போல இன்று வரை சூளைமேடு வீட்டைத் தாத்தா பராமரித்து வருகிறார். மல்லிகா என்ற பெண் தினமும் சுத்தம் செய்து விட்டுப் போவாள். அடுப்பு, மேஜை நாற்காலி எல்லாமே இருக்கிறது' என்றேன்.

‘ஏதாவது பலசரக்குக் கடையில் நிறுத்துங்கள்’ என்றாள் ஜமுனா. ஏதோ சில பொருட்களை வாங்கிக் கொண்டாள்.

சிறிது தூரம் சென்றதும் ‘நிறுத்துங்கள், நிறுத்துங்கள்’ என்றாள் ஜமுனா.

சென்னை பர்னிச்சர் மார்ட் என்ற கடையின் கதவை சாத்திக் கொண்டிருந்தார்கள். ‘அண்ணே கொஞ்சம் பொறுங்கள்’ என்றவாறு வண்டியிலிருந்து இறங்கி கடைக்குள் சென்றாள். ‘இரண்டு பாய்களும், தலையணைகளும் வேண்டும்’ என்றாள்.

‘வீட்டில் எல்லாமே இருக்கிறதே’ என்றேன்.

புன்னகைத்தாள் ஜமுனா. ‘புதிதாக வாங்கலாம். நீங்கள் காட்டுங்கள் அண்ணே’ என்றாள் ஜமுனா.

அவளுடைய புது மணக்கோலத்தையும், கையிலிருந்த பெரிய பையையும் சற்று சந்தேகமாகப் பார்த்த கடைக்காரர் ‘வீட்டை விட்டு ஓடி வந்து கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட்டீர்களா?’ என்று மெல்லக் கேட்டார்.

‘அப்படி இல்லை அண்ணே. கல்யாணம் பண்ணிக் கொண்டதும் வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டோம்’ என்று கூறி சிரித்தாள் ஜமுனா. கடைக்காரரும் புரியாமல் சிரித்தார்.

‘என்று கல்யாணம் நடந்தது?’ என்று கேட்டார் கடைக்காரர்.

‘இன்று காலையில்தான்’ என்றாள் ஜமுனா.

கடைக்காரர் காட்டிய பல உயர்தர பாய்களையும், தலையணைகளையும், போர்வைகளையும் புரட்டிப் பார்த்து தனக்கு பிடித்தவற்றை என்னிடம் காட்டினாள்.

‘நன்றாக இருக்கிறதா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘எல்லாமே நன்றாக இருப்பது போலத்தான் எனக்குத் தெரிகிறது. நீயே முடிவெடு. என்னிடம் கேட்காதே’ என்றேன்.

திடீரென நினைவு வந்தவளாக ‘பணம் எவ்வளவு இருக்கிறது?’ என்று மெல்லிய குரலில் கேட்டாள்.



என் சட்டை பையிலிருந்த எல்லா நோட்டுகளையும் மொத்தமாக அள்ளி அவள் கையில் கொடுத்தேன். எண்ணிப் பார்த்துவிட்டு சிறிது யோசித்தாள்.

பின் ‘அண்ணே, பாய்களும், தலையணைகளும் போதும்’ என்றாள்.

‘நல்ல போர்வையம்மா. குளிர் காலம் வேறு. எடுத்துக் கொள்ளுங்கள்’ என்றார் கடைக்காரர்.

‘இன்னொரு நாள் வந்து வாங்கிக் கொள்கிறேன். இப்போது பணமில்லை’ என்றாள் ஜமுனா.

தலையசைத்த கடைக்காரர் போர்வைகளையும் சேர்த்தே கட்டினார். பில்லில் போர்வையை சேர்க்கவில்லை.

‘பில் தப்பாக இருக்கிறது’ என்றாள் ஜமுனா.

‘எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. பாய் வாங்கினால் போர்வை இனாம்’ என்றார் கடைக்காரர்.

‘முதலில் சொல்லவில்லையே’ என்றாள் ஜமுனா.

‘இப்போதுதான் அந்த யோசனையே வந்தது. இன்றுதான் உங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கிறீர்கள். உங்கள் குடும்பமும், தொழிலும் வளரும் போது என் கடையை மறந்துவிடவா போகிறீர்கள்?’ என்றார் கடைக்காரர்.

பின் மோட்டார் சைக்கிளைப் பார்த்து விட்டு ‘இந்த மூட்டையை மோட்டர் சைக்கிளில் கொண்டு போக முடியாது’ என்றவர் கடை பையனை அழைத்து ‘டேய், நீ இதை மீன்பாடி வண்டியில் எடுத்துக் கொண்டு போய் இவர்கள் வீட்டில் கொடுத்து விடு’ என்றார்.

‘மணி ஒன்பதரையாகிவிட்டது’ என்று ஆரம்பித்தான் பையன்.

‘கஷ்டம்தான்’ என்று கூறிக் கொண்டே அவனிடம் இருபது ரூபாயை தந்தாள் ஜமுனா.

‘கஷ்டமெல்லாம் ஒன்றுமில்லை அக்கா. லேசாக குளிருகிறது என்று சொல்ல வந்தேன்’ என்றான் பையன்.

அவனிடம் வீட்டு அடையாளம் சொல்லிவிட்டு புறப்பட்டோம்.

## 15. முதலிரவு

நாங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் கடைப் பையன் வந்து பாய், தலையணை, போர்வை மூட்டையை கொடுத்துவிட்டுப் போனான்.

சிறிய வீட்டைச் சுற்றிப் பார்த்தாள் ஜமுனா. 'நன்றாக இருக்கிறது' என்றாள்.

'அண்ணார்கள் நாம் வெளியே போக வேண்டும் என்று சொன்னபோது அண்ணிகள் அதை மறுத்துப் பேசவில்லை. நாம் வீட்டை விட்டுப் போனால் என்ன செய்ய வேண்டும் என்று பேசினார்கள். நாம் வெளியே போகப் போவதாக சொன்னதும் கண்ணீர் விடுகிறார்கள். எதை உண்மை என்று எடுத்துக் கொள்வது?' என்றேன்.

'இரண்டுமே உண்மைதான். அக்காக்கள் மனதில் இருப்பதைத்தான் அத்தான்கள் பேசினார்கள். அக்காக்களுக்கு உங்கள் மீது அபாரப் பிரியம். என்னை சிலை என்று புகழ்ந்து திருஷ்டி பொட்டும் வைத்தார்கள். எந்தப் பெண்ணும் அதை செய்யமாட்டாள். உங்களை முழுப் பிரியத்துடன் ஏற்பதால்தான் அதைச் செய்தார்கள். ஆனால் அதற்காக அதிகாரத்தைப் பறி கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. அதனால்தான் வீட்டை விட்டு வெளியே அனுப்ப நினைத்து கூடவே கண்ணீரும் விட்டார்கள்' என்றாள் ஜமுனா.

'நீ எப்படி அதிகாரத்தை எடுத்துக் கொள்ள முடியும்?' என்று கேட்டேன்.

'எடுத்து கொண்டு விடுவேனோ என்ற பயம் அவர்களுக்கு வந்து விட்டது. என் மருமகள் மான்மியத்தைக் கேட்டதால் அந்த பயம் வந்திருக்கலாம்' என்றாள் ஜமுனா.



'நீ அதை பாடியபோது சந்தோஷப்பட்டார்கள். உன்னைக் கட்டி அணைத்துக் கொண்டார்களே!' என்றேன்.

'கவர்னசத்தையை அவர்கள் சார்பில் பழி வாங்கி விட்டேன் என்று நினைத்ததால் அக்காக்கள் அப்படிச் செய்தார்கள். அதன்பின் கவர்னசத்தையின் கதி தங்களுக்கும் வந்து விடுமோ என்று பயந்து விட்டார்கள்' என்றாள் ஜமுனா.

'தான் வெளியே போகும்போது நெக்லஸ் போட்டால் உன் மனம் சுருங்கும் என்றாரே அண்ணி? உன்னை அற்பப் பெண் என்பது போல பேசியது எனக்கு வருத்தமாக இருந்தது' என்றேன்.

'மாமியார் இல்லாத வீட்டில் தன்னைத்தான் மாமியாராக இரண்டு பேருமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் உங்களோடு வெளியே போவதைத் தன்னால் தாங்க முடியாது என்பதைத்தான் காபி அக்கா அப்படிச் சொன்னார். ஜவுளி அக்கா வாய்விட்டு அதை சொல்லவில்லை. நாம் அந்த வீட்டில் இருந்தால் அக்காக்களால் ஒரு வினாடி கூட நிம்மதியாக இருக்க முடியாது. அதனால்தான் உடனே வெளியே வர நினைத்தேன்' என்றாள் ஜமுனா.

'நீ பேசுவது உண்மை என்றே தோன்றுகிறது. ஆனால் நீ யோசித்துப் புரிந்து கொண்டது தவறாகவும் இருக்கலாமே?' என்றேன்.

'நான் அறிவை வைத்து யோசித்து இதையெல்லாம் புரிந்து கொள்ளவில்லை. அரைகுறையாகப் புரிந்து கொள்ளத்தான் புத்தியும். ஆராய்ச்சியும் வேண்டும். உள்ளது உள்ளபடி எதையும் சரியாக அறிந்து கொள்ள அவை தேவை இல்லை. ஒருவர் பேசும்போது, அந்தக் கணத்தில் அவரோடு ஒன்றாகி, அவராக மாறிவிடுவது உள்ளதை உள்ளபடி எனக்குக் காட்டுகிறது' என்றாள் ஜமுனா.

'மனோதத்துவ நிபுணர் போல பேசுகிறாய்' என்றேன்.

‘பாராட்டுவது போல கேலி செய்கிறீர்களே! எதுவும் தெரியாமல் எல்லாம் தெரிந்தது போலவா பேசுகிறேன்?’ என்றாள் ஜமுனா.

ஜமுனா சமையலறைக்குள் சென்று வாங்கி வந்த சாமான்களை அடுக்கி வைக்கத் தொடங்கினாள்.

பாய்களை விரித்து, அவற்றின் மீது போர்வைகளை விரித்து விட்டேன். சுவரோரமாக தலையணையை சாய்த்து, அதன் மேல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

அறைக்குள் வந்த ஜமுனா ‘என்ன யோசனை?’ என்றாள்.

‘உன்னைப் பற்றிய யோசனைதான். மாசறு பொன்னே வலம்புரி முத்தே, காசறு விரையே கரும்பே தேனே, அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே! பெருங்குடி வாணிகன் பெரு மடமகளே!’ என்றேன்.

‘உங்கள் ஜமுனா சிறுகுடி வாத்தியாரின் சாதாரண மகள்! வான்நிகர் வண்கை மாநாய்கன் குலக்கொம்பான கண்ணகி போல வண்டி நிறைய நகையோடு வரவில்லை’ என்றாள் ஜமுனா.

‘நான் மாதவியோடு பழக வழியில்லாமல் செய்துவிட்டாய். அதுவும் நல்லதற்குத்தான். சிலப்பதிகாரம் தெரியுமா?’ என்று கேட்டேன்.

‘ஏதோ கொஞ்சம்’ என்றாள்.

நான் வாசித்து ரசிப்பதையெல்லாம் பகிர்ந்து கொள்ள தோழி கிடைத்த மகிழ்ச்சியோடு ‘மலையிடைப் பிறவா மணியே என்கோ? அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ? யாழிடைப் பிறவா இசையே என்கோ?’ என்றேன்.

‘தீராக் காதலின் திருமுகம் நோக்கி இளங்கோ அடிகள் பாடுவதை மனப்பாடமாக சொல்வதை விட்டுவிடுங்கள். உங்கள் தீராக் காதலியின் திருமுகம் நோக்கி சொந்தமாக ஏதாவது சொல்லுங்கள்’ என்றாள் ஜமுனா.



‘எனக்குச் சொந்தமாக சாப்ட்வேர் மட்டும்தான் எழுதத் தெரியும். இந்த நேரத்தில் உன்னிடம் சாப்ட்வேர் பற்றியா பேச முடியும்?’ என்றேன்.

‘முடியாதுதான். தத்துவம் அல்லது காவியம் பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும்’ என்றாள் ஜமுனா புன்னகையோடு.

‘கேலி செய்கிறாயோ?’ என்றேன்.

‘இல்லையே’ என்றாள் ஜமுனா.

‘எனக்குத் தெரிந்ததையெல்லாம் உனக்குச் சொல்லித் தருகிறேன். இன்று சிலப்பதிகாரத்திலிருந்து ஆரம்பிக்கலாமா?’ என்று ஆவலுடன் கேட்டேன். நான் எவரிடமும் இதுபோல கேட்டதில்லை.

‘உங்கள் விருப்பம்’ என்றாள் ஜமுனா.

‘கண்ணகியிடம் கோவலன் நகையைப் பற்றி என்ன சொல்கிறான் தெரியுமா? ‘மறுவின் மங்கல அணியே அன்றியும், பிறிதணி அணியப் பெற்றதை எவன் கொல்’ என்கிறான். ‘மாசற்ற உன் இயற்கை அழகின் மேல், செயற்கையான தங்க நகைகளைப் போடுவது தேவையே இல்லை’ என்று அர்த்தம்’ என்றேன்.

‘இப்படி மனைவியிடம் நைச்சியமாகப் பேசி ஏமாற்றி எல்லா நகைகளையும் எடுத்துக் கொண்டு போய் மாதவியிடம் கொடுத்துவிட்டான் கோவலன்’ என்றாள் ஜமுனா.

‘இளவயது அப்பாவி. மாதவி அழகில் மயங்கி, ஆசையால் அறிவில்லாமல் நடந்து கொண்டுவிட்டான். அதற்குப் போய் அவனை திட்டலாமா?’ என்றேன். பின் என் பையிலிருந்து ஒரு சிறு பொட்டலத்தை எடுத்து ஜமுனாவிடம் நீட்டினேன். ‘உனக்காக இந்தப் பிறிதணியை வாங்கினேன். இது என் பிரியணி. பொன்னணி வாங்க தற்சமயம் வசதியில்லை’ என்றேன்.

பொட்டலத்தைப் பிரித்தாள் ஜமுனா. உள்ளே வெள்ளிக் கொலுசுகளும், பல வண்ணக் கண்ணாடி வளையல்களும் இருந்தன. ஒவ்வொன்றாக நிதானமாகப் பார்த்தாள்.

‘எல்லாமே அழகாக இருக்கின்றன. எனக்குப் பிடித்திருக்கிறது’ என்றாள் ஜமுனா.

கைகளிலிருந்த ஆறு தங்க வளையல்களையும், கால்களிலிருந்த வெள்ளி கொலுசுகளையும் கழற்றிவிட்டு, ‘நீங்கள் வாங்கி வந்தவற்றை நீங்களே போட்டு விடுங்கள்’ என்றாள்.

தட்டுத் தடுமாறி போட்டுவிட்டேன்.

அவள் கைகளை வளையல்கள் நிறைத்தன. கால்களை கொலுசுகள் தழுவின. அவள் கைகளால் வளையல்கள் மேலும் வண்ணமயமானது போலவும், கணுக்கால்களால் வெள்ளிக் கொலுசுகள் மேலும் பிரகாசிப்பது போலவும் கற்பனை செய்து கொண்டேன். எல்லாக் கணவர்களுக்கும் என்னைப் போலவே உளமயக்கு உண்டாகுமா என்று தெரியவில்லை.

அவள் கழற்றி வைத்த தங்க வளையல்களை எடுத்தேன். ‘வேண்டாம்’ என்று கூறிவிட்டு அவற்றையும், முதலில் போட்டிருந்த கொலுசுகளையும் பைக்குள் போட்டு பத்திரப்படுத்தினாள்.

என் பையில் இருந்த புல்லாங்குழலைப் பார்த்தாள். ‘வாசிப்பீர்களா?’ என்று கேட்டாள்.

‘தெரியாது. ஒரு இசை நிகழ்ச்சியில் ஆயிரமாவது ஆளாக டிக்கெட் வாங்கியதற்குப் பரிசாகக் கிடைத்தது’ என்றேன்.

குழலை எடுத்துப் பல கோணங்களில் பார்த்தாள்.

‘பழைய காலம் என்றால் விறகு அடுப்பு ஊத உனக்கு பயன்பட்டிருக்கும். கேஸ் அடுப்பிற்கு தேவைப்படாது’ என்றேன்.



புன்னகைத்த ஜமுனா குழலை இசைக்கத் தொடங்கினாள். ‘தீராத விளையாட்டு பிள்ளை’ பாட்டை இசைத்தாள். இனிமையாக இருந்தது.

‘எனக்குத் தெரிந்தவர்களில் குழல் வாசிக்கும் ஒரே பெண் நீ தான்’ என்றேன்.

‘உலகத்தில் என்னென்ன இசைக்கருவிகள் உள்ளனவோ எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும்’ என்றாள் ஜமுனா.

‘இதையெல்லாம் கற்றுக் கொள்ள உனக்கு நேரம் இருந்ததா?’ என்று கேட்டேன்.

‘நேரத்திற்கு என்ன பஞ்சம்? முடிவே இல்லாமல் இருக்கிறது’ என்றாள் ஜமுனா.

‘நீ யாரிடம் கற்றுக் கொண்டாய்?’ என்று கேட்டேன்.

‘குருவிற்குக் காணிக்கை தந்து கற்றுக் கொள்ளும் அளவிற்கு வீட்டில் ஏது வசதி? பக்கத்து வீட்டு குட்டி பையனுக்கு ஒரு பெரியவர் அவன் வீட்டிற்கே வந்து சொல்லித் தருவார். அவர் சொல்லித் தரும்போது அந்தப் பையனாக என்னை நினைத்து கேட்டுக் கொள்வேன். முன்னூறு ரூபாய் சேர்த்து வைத்து குழல் ஒன்று வாங்கினேன். இரவு தூங்குவதற்கு முன் நானாக ஊதி கற்றுக் கொண்டேன். பல வருஷங்கள் கழித்து கல்யாணம் நிச்சயமானதும் பெரியவருக்கு வேட்டி, சட்டை எடுத்துக் கொடுத்து அழைப்பு தந்தேன். புல்லாங்குழல் கற்றுக் கொண்டதைச் சொல்லி இதுதான் என் காணிக்கை என்று சொன்னேன். சந்தோஷப்பட்டார். ‘காணிக்கை என்ன காணிக்கை! ஆர்வத்தோடு நீ இருப்பது தெரிந்திருந்தால் நான் உனக்குக் காணிக்கை கொடுத்துச் சொல்லித் தந்திருப்பேன். நல்ல குருக்களுக்கு நாட்டில் பஞ்சமே இல்லை. நல்ல சிஷ்யர்கள் கிடைப்பதுதான் சிரமமாக இருக்கிறது’ என்று வருத்தமும் பட்டார்’ என்றாள் ஜமுனா.

‘எனக்கு வீணை பிடிக்கும்’ என்றேன்.

‘அதையும் வாசிப்பேன். தோழி வீட்டில் இருந்தது’ என்றாள் ஜமுனா.

‘வீணை ஒன்றும் வாங்கியிருக்க வேண்டியதுதானே?’ என்றேன்.

‘அப்பா ‘ஆயிரக்கணக்கில் ஆகுமே!’ என்று சொல்லி விட்டார்’ என்ற ஜமுனா குழலில் மேலும் சில பாடல்களை வாசித்துக் காட்டினாள்.

அவள் மடியில் சாய்ந்தேன்.

‘உங்கள் கம்ப்யூட்டரை நாளை கொண்டு வந்து விட வேண்டும். நீங்கள் வேலை பார்க்க வேண்டுமே!’ என்று கூறியபின்தான் என்னை மடியில் அனுமதித்தாள்!

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

## ஜீவிய மணி

*அன்பர்கள் பழைய சடங்குகளை மறுத்தால் அது விலகும். திருவுருமாறி நம் நிலைமை உயரும். இராகு காலம் பெரிய நல்லதைச் செய்யும். காலம் வலுவானது. மனிதன், முக்கியமாக மனிதனுடைய ஆத்மாவுக்கு வலிமை அதிகம். அன்னை கூறும் விளக்கங்களை அறிந்து, பாகுபாடு செய்து, நுணுக்கமாக உணர்ந்து, பழைய-தானாலும், புதியதானாலும், நல்லதை ஏற்று மற்றதை விலக்கினால் பலன் நூறு மடங்கல்ல, ஆயிரம் மடங்கு பெருகும்.*

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

## தீட்சண்யம்
## (Intellectuality)

இந்தியாவில் அறிவு வளர்ந்த இடங்களை மகாராட்டிரம், தமிழ்நாடு என பகவான் குறிப்பிடுகிறார். உலகில் அறிவு பிறந்த இடம் கிரீஸ். ரஷ்யா உணர்ச்சி மயமானது. மேற்கே போகப்போக அறிவு அதிகமாகும். பிரான்ஸ் அறிவின் சிகரத்தை எட்டியது. ஜெர்மனி அறிவின் சிகரமான தத்துவத்தைத் தொட்டது. பிரான்ஸ் இலக்கியம், மொழியில் அறிவால் சிறந்தது. அறிவு வளரும் பொழுது உணர்விலிருந்து பிரிந்து தீட்சண்யம் பெறும். தீட்சண்யம் தழலாகவுமாகும். மனம் சத்திய ஜீவியம். உலகம் அறியாதது. மனம் வளர்ந்து சத்திய ஜீவியமாக மனம் உணர்ச்சியிலிருந்து பிரியக்கூடாது. அன்னை சத்திய ஜீவியத்தைப் பெறக் கூடிய ஒருவரைக் கண்டு, அதை பகவான் ஆமோதித்தபின் அவர் பகவானைப்பற்றிய நூல் எழுதும் பொழுது அவருடல் நெருப்பாய் தகித்தது. நாம் எப்படி **The Life Divine**-ஐப் படித்து அறிவது என்பது கேள்வி. நூலுக்கு **outline** உண்டு. அது புரிந்து மனத்தில் நின்றால் 56 அத்தியாயங்களின் கருத்தைச் சேர்த்து அவற்றின் தொடர்ச்சியை அறிவது உதவும். இது புரியும் பொழுது உணர்ச்சி அறிவிலிருந்து பிரியக்கூடாது எனில், வாழ்வில் செயல்கள் அறிவும், உணர்வும் இணைந்த செயல்களாக இருப்பதால் (உதாரணம் பெம்பர்லியில் டார்சியும், எலிசபெத்தும் சந்திப்பது **Life Response**. அவை அறிவு, உணர்ச்சியுடன், உடல் உணர்வும் கலந்தவை) அவை நூல் தத்துவப்படி புரிவது நூல் புரிவதாகும். டார்சி, எலிசபெத் இருவர் உணர்ச்சியும் அறிவால் ஏற்கப்பட்ட நேரம் அவர்கள் சந்திப்பது **Life Response**. நூல் மனம், உணர்வு, உடல் இணைவது யோகம் எனக் கூறுகிறது. நூலைப் படித்து, வாழ்வைக் கவனித்து நூல்படி வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முயன்றால் நூல் அதிகமாகப் புரியும். வாழ்வு அதிகமாகக் கட்டுப்படும். எழுதினால் பலன் கொடூரமாக இருக்கும்.

## THE BOOK

**Bible** என்றால் புத்தகம். கிருஸ்துவர்கட்குப் புத்தகம் என்றால் அதுவே என்பதால் **Bible** அவர் வேதமாயிற்று. ஹிப்பியாக கல்லூரியை விட்டு வெளிவந்து வீட்டையும் விட்டு வெளிவந்து இலட்சியத்தைத் தேடி பெரும் படிப்பை நாடினர். அவர் படிப்பால் என்ன பெற்றார் என்று தெரியும்முன் கடையில் ஒரு புத்தகம் அவர் முன் விழுந்தது. அதை வாங்கிப் படித்து ஆசிரமம் வந்தார். 30 ஆண்டிற்குப்பின் அவர் பகவானிடமிருந்து அறிந்த அனைத்தையும் ஒரு நாவலாக எழுத நினைத்தார். பாட்டு அவருக்கு வராது. பாட்டு வராதவர் பாடினால் படிப்பது போலிருக்கும். நடிப்பும் அதுபோல். கதையை அறிவால் எழுதினால் அது கட்டுரை போலிருக்கும். ஆசிரமம் வந்தவர் பகவான் உலகைப் பற்றியும், வாழ்வைப்பற்றியும், சர்க்கார், நிர்வாகம், மனித சுபாவம் நிகழ்ச்சிகள், பிரபஞ்சம் ஆகியவற்றைப்பற்றியும் கூறியவற்றைப் படித்து அனுபவத்தில் அதன் முக்கியத்துவத்தை அறிந்தார். சிறு விஷயம் பெரிய காரியத்தைச் சாதிப்பதையும் பெருமுயற்சி சிறு காரியத்தைச் செய்ய முடியாததையும் மடையனின் மேதாவிலாசத்தையும் மேதையின் மகன் மாயையும் கண்டார். உலகப் பேரறிஞர்களில் ஏராளமான பேரைச் சந்தித்த பொழுது அவர்கள் பெறாத ஞானமிது எனவும் இதுபோன்று ஒரு ஞானம் உண்டு எனவும் அவர்கள் அறியவில்லை எனவும் கண்டார். அவர் சேவை ஒரு பெரிய சர்வதேச ஸ்தாபனத் தலைவராக்கியது. தான் பெற்ற ஞானம் ஆன்மிக ஞானம். இதன் அடிப்படை இந்தியர் அறிவது, பகவான் ஸ்ரீ அரவிந்தர் பெற்ற ஞானம் இன்று உலகில் இல்லாதது, இது வாழ்வின் எல்லா அம்சங்களையும் தழுவுகிறது எனக் கண்டார். இலட்சிய இளைஞர்கள் சிலர் சேர்ந்து இலட்சியமாக செயல்பட்டு இலட்சிய நிர்வாகம் செய்து தொழில் செய்வதாகக் கதை எழுதினர். அதற்கு பகவான் எழுதிய **The Life Divine**-னை வழிகாட்டியாக அவர்கள் கொண்டார்கள். சந்தேகம் வந்தால் தியானம் செய்து நூலைப் பிரித்துப் பார்த்து அதன்படி நடக்கிறார்கள். அந்த நூலை ஆக்கிரமிக்கும் சக்தியொன்றில்லை. அது கறைபட்டதை உணர்ந்து அதனின்று நூலையும் அதன் ஞானத்தையும் மீட்க நூலை மீண்டும் டைப் செய்து நூலின் ஞானத்திற்கு விடுதலை தருகிறார்கள் என்று கதையை முடிக்கிறார். அவர் நண்பர் நூலைப் படித்து இதில் ஜீவனேயில்லை, கட்டுரையாக இருக்கிறது என்றதால் அதற்கு **The Book** எனப் பெயர் அளித்ததையும், அவர் உற்சாகத்தையும் பத்து ஆண்டாக மறந்தார். இன்று நண்பர் ஒருவர் அந்நூலைப் படித்த பெண்மணி உற்சாகப்பட்டு பாதியில் இதை திரைப்படமாக எடுக்க விரும்புவதாக அறிந்து மகிழ்ந்தார். மகிழ்ந்தவர் நூலைப்பற்றி சிந்தித்த பொழுது கடந்த பத்து ஆண்டுகளாக உலகில் ஏற்பட்ட பெருமாறுதல்களைத் தான் எழுதிய நூலில் கண்டு ஆச்சரியப்பட்டார். பகவான் எழுதியவற்றிற்கு ஜீவன் உண்டு. ஜீவனற்ற செயலாலும், அந்த ஜீவன் தன்னை இழப்பதில்லை என்பது ஆன்மிக உண்மை. பகவான் உலகுக்கு ஞானத்தையோ, **(revelation)** ஞானவிளக்கத்தையோ கொண்டு வரவில்லை. அவர் கொண்டுவந்தது இறைவன் செயல் என அன்னை கூறியதின் சத்தியம் இதன்மூலம் தெரிகிறது.